பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விழயல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | புரட்டாதி 01 | திங்கட்கிழமை 17.09.2018 | கதிர் 316

## இது ரகசியம் அல்ல!

முதலமைச்சர் விக்னேஸ்வர னுக்கும் மற்றைய இரு மாகாண அமைச்சர்களுக்கும் எதிராக டெனிஸ்வரன் தாக்கல் செய்துள்ள நீதிமன்ற அவமதிப்பு வழக்கு நாளை மேன்முறையீட்டு நீதிமன் றத்தில் எடுத்துக் கொள்ளப்பட விருக்கின்றது. பக்கம் 03 >>>

# ரயிலுடன் கார் மோதி கோர விபத்து 4 பெண்கள் பலி; இருவர் படுகாயம்!





## வவுனியாவில் நேற்றுக் காலை கோரம்

வவுனியா, செப்ரெம்பர் 17

வவுனியா, பன்றிக்கெய்தகுளம் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ரயிலுடன் கார் ஒன்று மோதி கோர விபத்துக்குள்ளானதில் காரில் பயணம் செய்த நான்கு பெண்கள் அந்த இடத்திலேயே பலியாகினர். மற்றும் இருவர் படுகாயமடைந்தனர். காரின் சாரதியும் சிறுவன் ஒருவனும் எந்தவிதக் காயங்களுமின்றித் தப்பினர். பக்கம் 14 >>>

## நல்லாட்சி அரசை கவிழ்ப்பதற்கு இந்தியா மஹிந்தவுக்கு உதவுமாம்!

### கூட்டு எதிரணியின் குமார வெல்கம கூறுகிறார்

ரணில் – மைத்திரி ஆட்சியை கவிழ்க்க இந்தியா மஹிந்த ராஜபக்ஷவுக்கு உதவுமென கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு வருமாறு மோடி பக்கம் 14 >>>

## புதிய அரசமைப்பு நகலை இறுதி செய்ய வெள்ளியன்று கூடுகிறது வழிகாட்டல் குழு

கொழும்பு, செப்.17

புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான வழிகாட்டல் குழு மீண்டும் வெள்ளியன்று பிற்பகலில் நாடாளுமன்றக் கட்டடத்தில் பிரதமர் ரணில் தலைமையில் கூடுகின்றது.

நிபுணர் குழுவினால் புதிய அரசமைப்புக்கான நகல் வடிவத்துக்குரிய யோச பக்கம் 14 >>>

## பஸ் கட்டணம் 4 வீதத்தால் உயரும்?

பஸ் கட்டணத்தை 10 வீதத்தால் அதிகரிக்கவேண்டுமென பஸ் சங்கங்கள் கோரிக்கை விடுத்து வரும் நிலையில் வேண்டுமென்றால் 4 வீதத்தால் அதிகரிக்க பக்கம் 14 >>>

## பாரிய மாற்றங்களுடன் வருகிறது பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம்

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, செப்.12

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடாகக் கொண்டு வர உத்தேசிக்கப்பட்டிருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் நகல்வடிவத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

அந்தச் சட்டம் தற்போது நடை முறையில் உள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை விட பல விடயங்களில் பக்கம் 14 >>>

## உண்ணாவிரதமிருக்கும் அரசியல் கைதிகளை அ'புர சிறையில் சுமந்திரன், சயந்தன் சந்திப்பு

### இன்று அல்லது நாளை பிரதமருடன் பேசவும் உறுதி தெரிவிப்பு

அநுராதபுரம், செப்.17

தமது விடுதலையைக் கோரி கடந்த வெள்ளிக்கிழமை முதல் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒன்பது தமிழ் அரசியல் கைதிகளையும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி கே.சயந்தன் சகிதம் நேற்று நேரில் சிறைச் சாலைக்குச் சென்று சந்தித்துப் பேசினார் தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம். ஏ.சுமந்திரன். பக்கம் 14 >>>



## உண்ணாவிரத கைதி கொழும்புச் சிறை வைத்தியசாலைக்கு!

அநுராதபுரம், செப்.17

அநுராதபுரம் சிறைச்சாலையில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருக்கும் ஒன்பது தமிழ் அரசியல் கைதிகளில் ஒரு பக்கம் 14 >>>



# தமிழக மீனவர் தொடர்பில் சிறந்த தீர்வு எட்டப்படும்!





தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர்

தமிழக மீன்வளத்துறை அமைச்சர் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் இலங்கை மீன்வளத்துறை அமைச்சருடன் கலந்துரையாடுவார்கள் என இந்திய தமிழ்நாடு கல்வித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் தெரிவித்தார்.

இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பாக இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் விஜயமுனி சொய்சாவுடன் நேற்று காலை சந்தித்து கலந்துரையாடினோம் எனவும் அவர் தெரிவித்தார்.

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 102 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் அவர் பிறந்த ஊரான இலங்கையில் கண்டியில் நேற்று நடைபெற்றது.

இலங்கை கல்வி அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது. நிகழ்வின் ஆரம்பத்தில் காலை 10.00 மணிக்கு 'இதயக்கனி'நாளிதழின் ஆசிரியர் எஸ்.விஜயன் ஏற்பாடு செய்த எம்.ஜி.ஆர் தொடர்பான புகைப்படக் கண்காட்சி இடம்பெற்றது.

கண்காட்சியை இந்திய தமிழ்நாடு கல்வி, பள்ளித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், இலங்கையின் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் ஆகியோரும் தமிழ்நாடு சிவகாசி மாவட்ட எம்.எல்.ஏ. ஆகியோரும் இணைந்து ஆரம்பித்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்–

மறைந்த தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 102 வது பிறந்த தின நிகழ்வுகள் அவர் பிறந்த ஊரான இலங்கையில் கண்டியில் இன்று நடைபெறுகின்றது.

இதில் கலந்து கொள்வதற்காக எங்களுக்கு நல்ல வாய்ப்பு ஒன்றை இலங்கை கல்வித்துறை அமைச்சர் இராதாகிருஷ்ணன் ஏற்படுத்தித் தந்துள்ளார். இதனால் இவருக்கும் இலங்கை அரசாங்கத்திற்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இலங்கையில் அனைத்துப் பாடசாலைகளுக்கும் ஒரு இலட்சத்து ஐந்தாயிரம் நூல்கள் வழங்கப்படவுள்ளன.

அவர் பிறந்த ஊரில் நாங்கள் காலடி எடுத்து வைத்தமை எங்களுக்குப் பெருமையாகவுள்ளது.– என்றார்.

இதன்போது இலங்கை கல்வி அமைச்சர் இராதாகிருஷ்ணன் கருத்து தெரிவிக்கையில்–

இலங்கை - இந்திய மீனவ பிரச்சினையைப் பொறுத்த வரையில் இன்னும் ஓரிரு மாதங்களில் இலங்கை, இந்திய மீன்வளத்துறை அமைச்சர்களுக்கிடையில் பேச்சுகள் இடம்பெறும்.

இன்று காலை எமது மீன்வளத்துறை அமைச்சரை நானும், தமிழ்நாடு கல்வி, பள்ளித்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையனும் சந்தித்தோம். இதன்போது எமது இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் சென்னை செல்வார் எனத் தெரிவித்தார்.

சென்னையில் உள்ள மக்களோடு சந்தித்த பிறகு டெல்லி அரசாங்கமும், இலங்கை அரசாங்கமும் சேர்ந்து இதற்கு தீர்வு காண பேச்சுக்களை முன்னெடுக்க உள்ளன. இதன் மூலம் இலங்கை, இந்திய மீனவர்கள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என எதிர்பார்க்கின்றோம்.– என்று அவர் கூறியுள்ளார்.

## 20 ஆவது திருத்தத்தை ஆதரிப்பதா? ஐ.தே.கவின் முடிவு தாமதமாகுமா!



நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதென்பது வரவேற்கத்தக்க விடயம் எனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் அஜித் பி.பெரேரா, இப்பிரேரணை தொடர்பான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடை கலந்துரையாடலின் பின்னரே அறிவிப்போம் என்றும் தெரிவித்தார்.

மேலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதென்பது பொது மக்கள் மீது தாக்கம் செலுத்தக்கூடியதாக அமையும். ஆகவே இவ் விடயத்தில் காணப்படுகின்ற உண்மைத் தன்மைகளை மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

அத்துடன் 20 ஆவது திருத்தம் மீது முறைபாடுகள் எழுந்துள்ள நிலையில் அது தொடர்பான நீதிமன்ற தீர்ப்புக்களும் இந்தத் திருத்தத்துக்கு சாதகமாக அமைய வேண்டும். அதன் பின்னரே நாடாளுமன்ற விவாதத்தை முழுமையாக மேற்கொள்ள முடியும்.

எனவே இந்த எதிர்ப்புக்களின் மத்தியில் நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மையைப் பெறுவதென்பது சவாலாக இருக்கும்.– எனவும் அவர் சுட்டிக்காட்டினார்

## ஏவுகணைப் போர்க்கப்பல் சீனாவிடமிருந்து இலங்கைக்கு!



சீன கடற்படையினால் பயன்படுத்தப்பட்ட ஏவுகணைப் போர்க்கப்பல் ஒன்றை இலங்கைக்கு சீனா வழங்கவுள்ளது. 1993ஆம் ஆண்டு சீனக் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட 'ரொங்லிங்' என்ற ஏவுகணைப் போர்க்கப்பலே இலங்கை கடற்படைக்கு வழங்கப்படவுள்ளது.

தற்போது சீனாவில் உள்ள ஹூபோங் துறைமுகத்தில், இந்தக் கப்பலுக்கு மீள் பொருத்தும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இலங்கைக் கடற்படையின் வண்ணம் தீட்டப்பட்டு, பி- 625 என்ற தொடர் இலக்கமும் எழுதப்பட்டுள்ளது.

இந்தப் போர்க்கப்பல் இலங்கை கடற்படையின் ஆழ்கடல் ரோந்துக் கப்பல்களின் அணியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது.

இந்த நவீன போர்க்கப்பலின் பிரதான போராயுதமாக, ரி -79 வகையைச் சேர்ந்த 100 மி.மீ இரட்டைக் குழல் பீரங்கி இருக்கும்.

அத்துடன், கப்பலின் பின்புறமாக, ரி -76ஏ ரகத்தைச் சேர்ந்த, 37 மி.மீ இரட்டைக் குழல் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் இரண்டும் பொருத்தப்பட்டுள்ளன.

இந்தக் கப்பலில் ஹெலிக்கொப்டர் ஒன்று தரையிறங்குவதற்கான தளமும், நடுத்தர ஹலிக்கொப்டர் ஒன்றுக்கான தரிப்பிடம் மற்றும் களஞ்சியமும் உள்ளன.

## வடக்கு அரசியல் தலைவர்கள் பற்றி பேச ஆளுநருக்கு அருகதை இல்லை

### இப்படிக் கூறுகின்றார் சிறிதரன் எம்.பி.

கொழும்பு, செப்.17

இலங்கையின் மத்தியமாகாணத்திற்கு செல்ல முடியாதவாறு சமூக அடிப்படையில் விரட்டியடிக்கப்பட்ட வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேக்கு வடக்கு மாகாண அரசியல் தலைவர்கள் பற்றிக் கதைப்பதற்கு அருகதை இல்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.

கரைச்சி பிரதேசசபையின் கந்தபுரம் இலத்திரனியல் நூலகத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் தெற்கில் வாழும் சிங்களவர்களை திருமணம் செய்தமை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி போன்ற இடங்களில் இந்துக் கோவில்கள் அமைத்து தமிழர்கள் வழிபடுகின்றமை, வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு இராணுவ இரத்தம் ஓடுகிறது, தமிழர்களிடம் இனபேதம், சாதி பேதம், குலபேதம் இருக்கின்றது என்றெல்லாம் வடக்கு ஆளுநர் பொறுப்பற்ற முறையில் கருத்துக்களை தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும்.– எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## கிழக்கின் முதலமைச்சராக தமிழர் ஒருவரே வருவார்!



கிழக்கின் முதல்வராக தமிழர் ஒருவரே வருவார், அதுவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்துதான் வருவார் என தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் ஸ்ரீகாந்தா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மாவட்ட செயலக அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த வருடத்துக்குள் தீர்வு இல்லை என்றால் நாங்கள் தீர்க்கமாக பேசி நல்லதொரு முடிவை எமது மக்களுக்கு தெரிவிப்போம். ஆகவே மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

கிழக்கைப் பொறுத்த வரையில் தமிழ் கட்சிகள் தனித்து அறுதி பெரும்பான்மையை பெற்று கொண்டதில்லை. ஆகவே இங்கு ஆட்சி அமைப்பது என்பது மிக வும் ஒரு பெரும் சவலாகத்தான் இருக்கும்.

எனவே எமது கட்சி மக்களின் நலன் சார்ந்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளது.– என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த ஊடகச் சந்திப்பில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி., வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## தாமதமாகிறது சீனப் பிரதமரின் இலங்கை வருகை

சீன பிரதமர் லி கெகியாங் இந்த மாதம் இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த தமது விஜயத்தை பிற்போட்டுள்ளார் என்று தெரியவருகிறது.



இந்த மாதம் சீனப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளத்திட்டமிட்டிருந்தார்.

எனினும், இந்தப் பயணத்தில் தாமதம் ஏற்பட்டுள்ளது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பத்தரமுல்லவில் காணி வங்கி திறந்து வைப்பது, சீன பிரதமர் லி கெகியாங்கின் இலங்கை பயணத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

எதிர்காலத்தில் முதலீட்டாளர்கள் காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இந்தக் காணி வங்கி, உதவியாக இருக்கும்.

காணி வங்கி இலங்கை நாடாளுமன்ற வளாகத்துக்கு அருகில் அமையவுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர்
Kalaikkathir

### மறவன்புலவு சச்சி விசாரணைக்கு

சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தனை, நாளை கொழும்பில் விசாரணைக்கு முன்னிலையாகும்படி பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர், நேற்று அவருக்கு அழைப்பாணை கொடுத்துள்ளனர். சிவசேனை அமைப்பை ஆரம்பித்தமை தொடர்பான தகவல்கள், பதிவு தொடர்பான ஆதாரங்கள், வங்கிக் கணக்கு தொடர்பான விவரம், வெளிநாட்டுப் பயணம் தொடர்பான விவரங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்வதற்கே, அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

# தமிழ் மீனவர்களின் எரிக்கப்பட்ட 5 வாடிகள் நாயாற்றில் மீளமைப்பு

## தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாட்டில்



முல்லைத்தீவு, செப்.17

**முல்லைத்தீவு, நாயாற்றுப்பகுதியில் சட்டவிரோதக் குடியேற்றவாசிகளால் தீயிட்டு எரிக்கப்பட்ட தமிழ் மீனவர்களின் ஐந்து வாடிகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி இளைஞர் அணியினரின் ஒழுங்கமைப்பில் தியாகி அறக்கொடை நிறுவனம், மண் வாசனை அமைப்பு மற்றும் மனித நேயச் செயற்பட்டாளர்களின் உதவியுடன் மீளமைத்துப் பாதிக்கப்பட்ட குடும்பங்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.**

இந்த நிகழ்வில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், கட்சியின் தேசிய அமைப்பாளர் விஸ்வலிங்கம் மணிவண்ணன் மற்றும் புதுக்குடியிருப்பு உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் தம்பி ஐயா, முல்லை மாவட்டச் செயலாளரும், இளைஞர்அணியின் மத்திய் குழு உறுப்பினருமான திலகநாதன் கிந்துஜன், முல்லைமாவட்ட அமைப்பாளர், இளைஞர் அணிச் செயற் பாட்டாளர் விஸ்ணு மற்றும் கட்சியின் முல்லை மாவட்டச்செயற் பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்

## இரண்டாவது விசேட மேல் நீதிமன்றம் அடுத்த வாரத்திற்குள் ஸ்தாபிக்கப்படும்

வழக்குவிசாரணைகள் தாமதமாவதை தவிர்க்கும் நோக்கத்தில் ஏற்படுத்தப்படும் மூன்று விசேட மேல் நீதிமன்றங்களில் இரண்டாவது மேல்நீதிமன்றத்தை அடுத்த வாரத்திற்குள் ஸ்தாபிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இந்த இரண்டாவது விசேட மேல் நீதிமன்றம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை நீதியமைச்சு அடுத்த வாரம் வெளியிட உள்ளதாகத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாரிய ஊழல், மோசடிகள், அரசசொத்துக்களை தவறாக பயன்படுத்தியமை, படுகொலைகள் போன்றகுற்றங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க மூன்று நீதிபதிகள் அடங்கிய இந்த விசேட மேல் நீதிமன்றங்களை அரசாங்கம் ஏற்படுத்தவுள்ளது.

ஏற்கனவே முதலாவது விசேட மேல் நீதிமன்றம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு விசாரணைகளும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அவதூறு வழக்கு விடயத்தைச் சுமூகமாகத் தீர்ப்பதற்கு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் பல முன் முயற்சிகளை எடுத்தார் என்றும், சம்பந்தப்பட்ட தரப்புகள் இடையே இணக்கம் எட்டப்பட்டுள்ளது என்றெல்லாம் பல செய்திகள் பரபரப் பாக வெளியாகியிருந்தன.

ஆனால், களநிலைமையில் எந்த முன்னேற்றமும் இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

சிவஞானம் பல்வேறு முயற் சிகளை எடுத்தார் என்பது உண்மைதான். பல தடவைகள் முதலமைச்சர் விக்னேஸ் வரனுடனும், டெனிஸ்வரனுடனும் பல சுற்று சந்திப்புகள், பேச்சுக்களை நடத்தினார் என்பதும் வாஸ்தவம்தான்.

ஆனால், அவை எவற்றினாலும் எந்த விடயத்தையும் முன் நகர்த்த முடியவில்லை என்பதுதான் யதார்த்தம்.

சம்பந்தப்பட்ட தரப்புகளைத் தாண்டி, அவர்களின் சட்டத்தரணிகள் வரை இந்த சமரச முயற்சி விவகாரம் போகவே இல்லையாம்.

சிவஞானமும் நேற்று முன்தினம் இரவு கொழும்புக்குப் புறப் பட்டுப் போய் நேற்று அதிகாலை இந்தியா பறந்து விட்டார். மாகாண சபை சகாக்கள் ஒரு தொகுதியினருடன் இந்தியத் தரப்பின் அழைப்பை ஏற்று அங்கு போய்ச் சேர்ந்திருக்கும் சிவஞானம் இனி 23 ஆம் திகதி இரவுதான் கொழும்பு மீளுவார்.

இந்தியாபுறப்பட முன்னர்சட்டத்தரணி சுமந்திரனுடன் தமது சமரச முயற்சி குறித்து சிவஞானம் பேசியிருப்பார் போல.

அதனடிப்படையில் டெனிஸ் வரனின் சட்டத்தரணிசுரேன் பெர்னாண்டோவுடன் தொடர்பு கொண்டார் சுமந்திரன்.

இந்த விடயத்தில் தரப்புகள் - கட்சிக் காரர்கள் - தங்களுக்குள் இணக்கமாகவும் சுமுகமாகவும் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பு இருக்கின்றது எனத் தமக்குக் கூறப்பட்டதாக சுமந்திரன் தெரிவித்தார். அது குறித்து விசாரிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

சற்று நேரத்தில் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு டெனிஸ்வரனின் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ ஒரு செய்தி அனுப்பினார்.

*"உங்கள் கூற்றுப்படி முதல்வர் விக்னேஸ்வரனின் சட்டத்தரணியான கனகேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு விசாரித்தேன். தமது கட்சிக்காரர் (முதல்வர் விக்னேஸ் வரன்) சமரச இணக்கப்பாடு குறித்து ஒரு வார்த்தை தன்னும் தன்னுடன் பேசவேயில்லை என்றும் அப்படியிருக்கையில் சமரச ஏற்பாடு என்று ஒரு முயற்சி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை என்றும் எனக்குக் கூறியுள்ளார்."*

- இதுதான் டெனிஸ்வரனின் சட்டத்தரணி அனுப்பிய செய்தி.

அப்படியானால், அவைத் தலைவர் சிவஞானம் முதற் கொண்டு பலரும் சமரச முயற்சி கள் குறித்து முதல்வருடன் பேசிய போதிலும், நேற்று வரை அப்படி ஓர் எண்ணப்பாடு - முயற்சி - சிந் தனை - சில தரப்புகளின் உள்ளன என்று கூட முதல்வர் தமது சட்டத்தரணிக்குத் தெரிவிக்க முன் வரவேயில்லை.

ஆக, இந்த விடயத்தில் ஏதே னும் சமரசத் திட்டத்தில் முதல்வருக்கு நம்பிக்கையோ - விருப்போ - எதிர்பார்ப்போ - கிஞ்சித்தும் கூட இருக்கவேயில்லை என்பது இதனால் புலனாகின்றது.

எது என்றாலும் நீதிமன்றத்தை எதிர் கொள்ளப் போகின்றவர் அவர்தானே...! அவரே தீர்மானித் துக் கொள்ளட்டும்.

ஆனால் நீதிமன்ற அவதூறு வழக்கு நாளைக்கு விசாரணைக்கு வருவதால் இனிமேல் இவ்விடயத் தில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்பது தெளிவு.

இனி நீதிமன்றம் தீர்மா னிக்கட்டுமே...!

- மின்னல்-

## 20 கிலோ கஞ்சாப் பொதியுடன் அதிகாலையில் வவுனியா ரயில் நிலையத்தில் இளைஞன் கைது



வவுனியா, செப்.17

நேற்று அதிகாலை 4மணியளவில் வவுனியா ரயில் நிலையத்தில் வைத்து யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா வந்த ரயிலில் 19கிலோ 265கிராம் கேரளா கஞ்சாவைப் பொதி செய்து எடுத்து வந்த - வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த - 34வயதுடைய ஸ்ரீராம் விஜிதன் என்ற இளைஞனைத் தாங்கள் கைது செய்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் கிளிநொச்சியிலிருந்து வவுனியாவிற்கு இந்தக் கஞ்சாவைஎடுத்து வந்தார் என்பது பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளதாம்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகப் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

## இலங்கைக் கடற்படைத் தாக்குதலில் எட்டு தமிழக மீனவருக்குக் காயமாம்

இராமேஸ்வரம், செப்.17

இலங்கை கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 8 தமிழக மீனவர்கள் காயமடைந்துள்ளனர் என இராமேஸ்வரம் மீன்பிடித்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு அருகே நேற்று சுமார் 100 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்டு மீளத் திரும்பும் போது இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கைக் கடற்படையினர் துப்பாக்கியைக் காட்டி அச்சுறுத்தியமையுடன், கடற்பரப்பிற்குள் வந்தால் கைதுசெய்யப் படுவார்கள்என்றும், அவர்களை வெளியேறுமாறு அறிவுறுத்தினர் எனவும் இராமேஸ்வரம் இயந்திர படகுகள் மீனவர் சங்கத் தலைவர் எஸ்.எமரிட் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், லட்சக் கணக்கான இந்திய ரூபா பெறுமதியான மீன்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்திய மத்திய அரசாங்கமும், தமிழக அரசாங்கமும், இலங்கையுடன் பேச்சு நடத்தி மீனவர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் இராமேஸ்வரம் இயந்திர படகுகள் மீனவர் சங்கத் தலைவர் எஸ்.எமரிட் மேலும் தெரிவித்துள்ளார்.

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


# அரசுக்கு இனியும் முண்டு கொடுப்பதா?

மஹிந்த ராஜபக்ஷ காலத்து ஆட்சி நிர்வாகத்தை இப்போதைய ஜனாதிப்தி மைத்திரிபால சிறிசேன குறை கூறுகின்றமையைப் பார்க்கும்போது 'சட்டியைப் பார்த்துப் பானை கறுப்பு என்டதாம்' எனும் பழமொழிதான் நினைவுக்கு வருகின்றது.

சரியோ, பிழையோ பாதுகாப்புப் படைகளின் பிரதான தளபதி அட்மிரல் ரவி விஜய குணவர்தனவைக் கைது செய்யும் உத்தரவை நீதிமன்றம் விடுத்திருக்கின்றது.

ஆனால், அந்தக் கைது உத்தரவுக்கு எதிராக அரசுத் தலைவர் சீறுகின்றார். அந்தப் படை அதிகாரியைக் கைது செய்ய முடியாது என முழங்குகின்றார்.

நீதிமன்றக் கைது உத்தரவு இருக்கத்தக்கதாகவே அவர் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு ஜனாதிபதியும் சேர்ந்து உடந்தையாகச் செயற்படுகின்றார்.

இதற்கிடையில் –

நீதிமன்ற விவகாரத்தில் தலையிடும் வகையில், அந்தப் படை அதிகாரியைக் கைது செய்யும் தேவை ஏதும் இல்லை என்று அரசுத் தகவல் திணைக்களம் உத்தியோக பூர்வமாக அறிவிக்கின்றது.

இவை எல்லாம் நாட்டின் நீதித் துறையில் அரசும், ஜனாதிபதியும், ஆட்சித் தரப்பினரும் முழு அளவில் நேரடியாகத் தலையிடுகின்றனர் என்பதற்கு மிக அப்பட்டமான எடுத்துக் காட்டுக்கள்.

நீதிமன்றம் கைது உத்தரவு விடுத்திருக்குமானால் சம்பந்தப்பட்டவர் அதை எதிர்கொண்டு, சட்டரீதியாகத் தன்னைச் சுத்தவாளி என்று நிரூபிப்பதுதான் முறைமை.

அதைவிடுத்து, அந்த கைது விவகாரங்களில் ஆட்சித் தரப்பு தலையிடுவது என்பது நீதி விடயத்தில் அரசுத் தரப்பு தலையீடு செய்கின்றது என்பதைத்தான் குறிக்கின்றது.

பல நூற்றுக் கணக்கில் தமிழர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காலவரையறையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருந்தபோது வராத கோபம் –

பல நூற்றுக் கணக்கில் தமிழர்கள் பல ஆண்டு காலம் தடுப்புக் காவல்களில் வாடி வதங்கிய பின்னர், மிக மோசமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழேயே குற்றம் நிரூபிக்கப்படாமல் வேறு வழியின்றி விடுதலை செய்யப்பட்டபோது வராத வெப்பியாரம் –

இப்போது சில படை அதிகாரிகள் சில மாதங்கள் விளக்க மறியலில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டபோது நாட்டின் தலைவருக்கு வந்திருக்கின்றது.

அந்தப் படை அதிகாரிகளுக்கு எதிராக இன்னும் குற்றப் பத்திரங்கள் கூட தாக்கல் செய்யப்படவில்லை, அவர்களை ஏன் கைது செய்தீர்கள், அவர்களை ஏன் விளக்க மறியலில் வைத்திருந்தீர்கள் என்றெல்லாம் குற்றப் புலனாய்வு அதிகாரிகளையும், சட்டமா அதிபர் திணைக்களத்தினரையும் பார்த்துச் சீறியிருக்கின்றார் ஜனாதிபதி.

அந்த அதிகாரிகள் தொடர்பான விசாரணைகள் நடக்கின்றன, விசாரணைகளில் முன்னேற்றங்கள் இருக்கின்றன என்று கூறப்படுகின்றது. ஆனால் அவை முன்னேற முன்னர் முடக்கு – தடக்கு – போடப்படுவதாகவே தோன்றுகின்றது.

ஒரு சில அதிகாரிகளுக்காக இவ்வாறு கோபப்படும் நாட்டின் தலைவர், தமிழ் அரசியல் கைதிகள் குறித்து அலட்டிக் கொள்கின்றார் இல்லை. இப்படிக் கொடூரமான – மிகப் பயங்கரமான – பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டமை குறித்து சிரத்தை கொள்கின்றார் இல்லை.

தமிழருக்கு நீதி செய்ய மறுக்கும் அரசுத் தலைவர், பாதுகாப்புத் துறையினரை நீதி விசாரணைக்கு உட்படுத்துவதற்குக் கூட அனுமதிக்க மறுக்கின்றார். அதற்கு முட்டுக் கட்டை போட்டு தடுக்க முற்படுகின்றார்.

ஒரு சில படை அதிகாரிகள் மீதான குற்ற விசாரணைப் பிரிவினரின் நடவடிக்கை தொடர்பிலேயே இவ்வளவு சீற்ற முற்று அவற்றை எதிர்க்கும் இந்த ஜனாதிபதி, தமிழர் விடயத்தில் அவர்களுக்கு நீதி செய்யும் – நியாயம் வழங்கும் – சுயாதீனமான, சுதந்திரமான விசாரணைப் பொறிமுறைக்கு இணங்குவார் என்று நம்புவது துர்லபமே.

இத்தகைய அரசுத் தலைவருக்கும், அவரது அரசுக்கும் முண்டு கொடுக்கும் போக்கில் தமிழ்க் கூட்டமைப்புச் செயற்படுவது மிகவும் ஆபத்தானதும், ஈழத் தமிழருக்கு முழுவதும் எதிர்ப்பானதுமான கொடூர நடவடிக்கையாகவே பார்க்கப்பட வேண்டும்.

யுத்த காலத்திலும், அது முடிவுற்ற காலத்திலும் தனது படைத் தரப்பைக் காப்பாற்றும் பாணியில் செயற்பட்ட மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிப் பீடத்தின் போக்கையாவது ஓரளவுக்குப் புரிந்து கொள்ள முடிந்தது.

நீதியை நிலைநாட்டுவோம், பொறுப்புக் கூறலை நிலை பெறச் செய்வோம் என்றெல்லாம் தமிழருக்கு வாக்குறுதி கொடுத்துவிட்டு, அதைப் பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்துக்கும் வந்து விட்டு, இப்போது தமிழரை நிராகரித்து, பௌத்த, சிங்களப் பேரினவாதப் போக்கில் மைத்திரி அரசு நகர்கின்றது என்பது தெளிவு.

அந்த அரசுக்குக் கூட்டமைப்பு இனியும் கூட ஆதரவு கொடுக்க வேண்டுமா? சம்பந்தன், சுமந்திரன் சிந்தித்து ஒரு முடிவு எடுப்பார்களாக!

# கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கோருகின்றார் மஹிந்தர்

கொழும்பு, செப்.17

கோட்டாபய ராஜபக்ஷவின் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அநுராதபுரம் பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.



பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக டி சில்வா தெரிவித்திருக்கிறார் எனக் கூறப்படும் கொலை முயற்சி விவகாரம் பற்றிய கருத்துத் தொடர்பாக விசாரணை ஆரம்பித்திருப்பதைக் காண முடியவில்லை. பாதுகாப்பு தரப்பினர் உடனடியாக இது தொடர்பில் விசாரணையை ஆரம்பித்து உண்மைய நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். இதுபோன்ற சூழ்நிலையில் கோட்டாபய ரா்ஜபக்ஷவின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

# கட்டிக் காட்சிக்கு வைத்து இறைச்சிக்கு வெட்டப்பட இருக்கும் காளை மாடு

## நேற்றுப் பங்கு போடும் திட்டம் இடைநிறுத்தம்



யாழ்ப்பாணம் நகரில் காட்சிப்படுத்தப்பட்ட காளை மாட்டை இறைச்சிக்காக வெட்டும் திட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடைநிறுத்தப்பட்டது.

அந்த மாட்டைக் காட்சிப்படுத்தியவேளை நுழைவுக்கட்டணமாக 100 ரூபா அறவிப்பட்டிருந்தது. நுழைவுச் சீட்டுக்களை வழங்குவதற்கு மாநகர சபையிடம் அனுமதிபெறப்படவில்லை எனக் கூறப்படுகின்றது. அதற்கான வரிகள் தமக்கு செலுத்தப்படவில்லை எனயாழ்ப்பாணம்பொலிஸ்நிலையத்தில் மாநகர சபையினரால் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதனை அடுத்து மாட்டைக் காட்சிப்படுத்திய நபரை பொலிஸார் அழைத்து வாக்குமூலத்தை பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் நேற்றுக் காலை திடீரென சுகாதார பிரிவினரும் இறைச்சிக்குஅந்தமாட்டைவெட்ட அனுமதிக்கவில்லை. பின்னர் மாட்டை மீண்டும் ஒரு தடவை பரிசோதனைக்கு உட் படுத்திய பின்னர் காலை 9 மணிக்கு பின்னர் வெட்ட அனுமதித்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதனால் நேற்றுக் காலை மாடு இறைச்சிக்காக வெட்டப்படவில்லை.

அதேவேளை மாடு நேற்றைய தினம் காலை இறைச்சிக்காக வெட்டும் நோக்குடன், யாழ். பண்ணைபகுதியில் உள்ள கொல்களத்தில் கட்டப்பட்டிருந்தது.

### பின்னணி

யாழ்ப்பாணத்தில் மாடொன்றைக் காட்சிப்படுத்தி அது இறைச்சிக்காக வெட்டுப்படவுள்ளமை தொடர்பில் சமூக ஆர்வலர்கள் மத்தியில் கடும் விமர்சனங்கள் எழுந்திருந்தன.

யாழ்.ஐந்து சந்திப்பகுதியில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு முன்பாகவுள்ள காணி ஒன்றில் அந்தக் காளை மாடு கடந்த செவ்வாய்க்கிழமை முதல் காட்சிப்படுத்தப்பட்டு நேற்று ஞாயிற்றுக் கிழமை வெட்டப்படுவதாக இருந்தது. அதன் ஒரு பாங்கு இறைச்சி ஆயிரம் ரூபா எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தக் காளை மாடு யாழ். குப்பிளான் பகுதியில் உள்ள ஒருவர் வளர்த்துள்ளார்.

"குடும்பத்தின் பொருளாதார நிலைமை காரணமாக அதனை தமிழர் ஒருவருக்கு விற்றோம். அவர் அதனை வளர்க்க என்று கூறியேவாங்கிச்சென்றார். இறைச்சிக்காக அதனை விற்பார் என தெரிந்திருந்தால் அதனை அவரிடம் விற்று இருக்க மாட்டோம்.

"இந்த மாடு 2016.03.25 ஆம் திகதி பிறந்தது. இரண்டரை வயதுடைய மாட்டை இறைச்சிக்காக வெட்டுவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. இந்த மாட்டை தன்னார்வலர்கள் முன் வந்து காப்பற்றுங்கள்." – என்று மாட்டின் ஆரம்ப உரிமையாளர் கோரிக்கை விடுத்துள்ளார்.

காளை மாட்டின் தற்போதைய பெறுமதி 6 லட்சம் ரூபாவாகும். அதனைக் காப்பாற்ற விரும்புவோர் 6 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து மாட்டை கொள்வனவு செய்யுமாறு மாட்டை இறைச்சிக்கு வெட்ட இருந்த நபர் அறிவித்திருந்தார்.

# யாழில் மூடப்பட்ட கிணறுகளைத் தோண்டினால் காணாமல் போனோரைக் கண்டுபிடிக்கலாம்

## இப்படிக் கூறுகின்றார் விஜயகலா மகேஸ்வரன் எம்.பி.

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்வடக்கில் மூடப்பட்ட கிணறுகளைத் தோண்டினால் காணாமல் போனவர்களைக் கண்டுபிடிக்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போதுஅங்குதொடர்ந்தும் கருத்துவெளியிட்ட அவர், வடக்கின் பலபகுதிகளிலும் அதிக எண்ணிக்கையானோர் காணாமல்போயுள்ளனர் – என்றார்.

எனினும் இந்த பிரதேசத்தில் காணாமல்போனவர்களைகண்டுபிடிக்க யுக்தி ஒன்று காணப்படுகின்றது.

உதாரணமாக இங்கே எத்தனையோ கிணறுகள் மூடப்பட்டுள்ளன. இந்த கிணறுகளை இனங்கண்டு அவற்றை தோண்டுகின்ற போதுகாணாமல்போனவர்களைக் கண்டுபிடிக்க முடியும். – எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, அண்மையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில்விடுதலைபுலிகள் அமைப்பை மீளுருவாக்க வேண்டும் என தெரிவித்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் சர்ச்சையில் சிக்கினார். இதன் காரணமாக, அவர் தனது இராஜாங்க அமைச்சர் பதவியை இராஜினாமா செய்திருந்த நிலையில், அவருக்கு எதிராக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## நாளை

18.09.2018
திங்கட்கிழமை

நட்சத்திரம் : மூலம் மு.ப 11.07 வரை
திதி: நவமி மு.இ 10.38 வரை
சுபநேரம் : 10.33 – 12.03 வரை
இராகுகாலம் : 3.03 – 4.3 3 வரை

# தனிநாடு இனி வேண்டாம் அதிகாரப் பகிர்வே தேவை

## கனடாவில் கூறினார் ஆனோல்ட்

மொன்றியல், செப்.17

யுத்த காலத்தில் நாம் தனிநாடு கேட்டோம். இப்போது அதைக் கேட்கவில்லை. இப்போது கேட்பது ஒருமித்த நாட்டில் சுயநிர்ணய அடிப்படையில் எங்களை நாங்களே ஆளக்கூடிய அதிகாரப்பகிர்வு.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். நகர முதல்வர் இம்மானுவேல் ஆர்னோல்ட்.

கனடாவுக்கு விஜயம் செய்துள்ள அவர், அங்கு இடம்பெற்ற வரவேற்பு நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

யாழ்ப்பாண நகர் நீண்டகாலமாகத் தமிழர்களின் கலாசாரத் தலைநகராக இருந்து வருகிறது. அந்த நகரத்தின் முதல்வராக நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். மாநகர சபைக்குள் நுழைய முன்னர் கட்சி அரசியலை மறந்துவிட்டு மக்கள் சேவையை மட்டும் மனதில் கொண்டு உள்நுழையுமாறு எல்லோரையும் கேட்டுக் கொண்டேன்.

யாழ்ப்பாண நகரை ஒரு தூய்மையான, அழகான, பொலிவான நகராக மாற்றி அமைக்க நான் உறுதிபூண்டுள்ளேன். அதற்குப் புலம்பெயர் தமிழரின் உதவியும் தேவை. போரினால் அழிவுண்ட மாநகர சபைக் கட்டடத்தை ஐக்கிய நாடுகள் மேம்பாட்டு நிறுவனத்தின் நிதியுதவியோடு மீளக் கட்டியெழுப்ப இருக்கிறோம்.

யுத்த காலத்தில் நாம் தனிநாடு கேட்டோம். இப்போது அதைக் கேட்கவில்லை. இப்போது கேட்பது ஒருமித்த நாட்டில் சுயநிர்ணய அடிப்படையில் எங்களை நாங்களே ஆளக்கூடிய அதிகாரப்பகிர்வு.

தேர்தல் பரப்புரையில் அரசியல் தீர்வையும், மீள்கட்டுமானம், மறுவாழ்வு, வாழ்வாதார மேம்பாடு, பொருளாதார வளர்ச்சி என்பவற்றையே வலியுறுத்தினோம்.



தமிழ் மக்களின் ஒன்றுபட்ட பலமாக உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சிதைப்பதன் மூலம் தமிழ் மக்களைக் கூறுபோட நினைப்பவர்களின் உள்நோக்கம் என்ன?. புலம் பெயர்ந்தோர் ஏன் அவர்களுக்குத் துணை போகிறார்கள்?

மாகாண முதலமைச்சர் தன் கட்சித் தலைமைக்குக் கட்டுப்படாமல், கட்சிக்குள்ளேயே ஒற்றுமையைச் சிதைத்து, மிக மோசமான நிர்வாகச் சீர்கேடுகளை அனுமதித்த காரணத்தாலேயே நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செல்வாக்கு சரிந்து காணப்பட்டது.

யாழ் மாநகர சபையில் கட்சி பேதங்களை ஒதுக்கிவிட்டு அனைவரையயும் அரவணைத் துச் சிறப்பாகப் பணியாற்றுகின்றேன்.

யாழ்.மாநகர சபைக்கு வந்து திரும்பிய நிதி, கிடப்பில் போடப்பட்ட நிதி, புதிதாகக் கிடைக்கும் நிதி அனைத்தையும் முடியுமான வரை மீளப்பெற்று நகரை அபிவிருத்தி செய்ய இருக்கின்றேன்.

குரைப்பவர்களைப் பற்றிப் பொருட்படுத்தாமல், விமர்சனங்களைக் கவனிக்காமல் எது சரியோ அதனைச் செய்து கொண்டு எனது இலக்கை நோக்கிச் செல்கின்றேன்.

போருக்கான சூழ்நிலையை உருவாக்கி மீண்டும் தனி ஈழம் பெறலாம் என்ற ஒரு மாயையை ஒரு பகுதியினர் ஏற்படுத்துகிறார் கள். அது மக்களை மீண்டும் நிரந்தர அழிவுக்குள் தள்ளிவிடும். இதனால் யார் நன்மை பெற விரும்புகிறார்கள்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக் கொண்ட அபிவிருத்தித் திட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்ததாலும், புதிய அரசமைப்பு நிறைவேற 2/3 பெரும்பான்மையைக் காட்டவேண்டி இருப்பதாலும் வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்தோம். அது தவிர அரசைக் காப்பாற்ற வேண்டிய தேவை எமக்கில்லை.

புதிய அரசியல் திட்டவரைவில் இருக்கும் முற்போக்கு அம்சங்கள் பற்றி யாரும் சொல்வதில்லை. ஊடகங்கள் எழுதுவதே இல்லை. இருப்பதை இல்லை என்றும் இல்லாததை இருப்பதாகவும் வெறும் பொய்களை ஏன் திரும்பத் திரும்பக் கூறி மக்களை ஏமாற்றப் பார்க்கிறார்கள்?-என்றார்.

## திருமலையில் நிலநடுக்கத்தின் பின் அதிர்வுகள் இல்லை

இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் தொடர்பில் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் ஆய்வுகளை மேற்கொண்டு புதிய தகவல்களை வெளியிட்டுள்ளது.

இதன்படி திருகோணமலையில் கற்பாறைகள் உள்ள மலைப் பாங்கான பகுதிகளிலேயே நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இந்த நில நடுக்கத்தின் பின் வேறு நில அதிர்வுகள் எதுவும் பதிவாகவில்லை எனவும் புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் சந்தரி விமல் சிறிவர்தன ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலும் ஆய்வுகள் மேற்கொள்ளவுள்ளன என புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு சுமார் 12.35 அளவில் 3.5 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விமான நிலையத்தில் பதற்றத்தை ஏற்படுத்திய தம்பதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை!

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பதற்றத்தை ஏற்படுத்தி சுங்க திணைக்கள அதிகாரிகள் 5 பேரை தாக்கிய குவைத் நாட்டு தம்பதிகளுக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இவர்களுக்கு 5 வருடங்களுக்கு ஒத்தி' வைக்கப்பட்ட 6 மாதகால சிறைத்தண்டனையும், தலா 9,000 ரூபா அபராதமும் விதித்து நீர்கொழும்பு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

பணிக்கு இடையூறு விளைவித்தமை, அதிகாரிகளை மதிக்காமை மற்றும் அவர்களை தாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களில் அவர்களுக்கு இதற்கு முன்னரும் ஒன்றரை லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

ஜூன் மாதம் 27ஆம் திகதி இவர்கள் இலங்கைக்கு வரும் போது தமது வளர்ப்பு நாயை கொண்டு வந்திருந்தனர்.

எனினும், இலங்கை சட்டத்தின் பிரகாரம் அந்த நாயை சுங்க அதிகாரிகள் 3 நாள்கள் விலங்கியல் பராமரிப்பு நிலையத்தில் வைத்து சோதனை செய்ய வேண்டும்.

எனினும் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டு, குறித்த குவைத் நாட்டு பெண் பாரிய ரகளையில் ஈடுபட்டு, அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தி விட்டு நாயுடன் வெளியேற முற்பட்டிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திய இலங்கை சுங்க திணைக்களம் வளர்ப்பு நாயை விடுவிப்பதற்கு ஐம்பதாயிரம் ரூபாய் தண்டப் பணமும், தாக்குதலை மேற்கொண்ட பெண்ணுக்கு ஒரு லட்சம் ரூபா தண்டப்பணமும் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின் தடை

யாழ்ப்பாணம், செப். 15

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்ட மைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை-

யாழ் பிரதேசத்தில் - சிவகாமி அம்மன் கோவிலடி காரைநகர் ஆகிய இடங்களிலும்-

வவுனியா பிரதேசத்தில் - தவசிக்குளம் கிராமம், அண்ணா நகர், சிறீ நகர், பூந்தோட்டம் கைத்தொழிற்பேட்டை ஆகிய இடங்களிலும் -

மன்னார் பிரதேசத்தில் - மடுமாதா ஆலயப் பிரதேசம், மடுமாதா ஆலயம், முகத்தாங்குளம் 2வது பண்ணை ஆகிய பிரதேசங்களிலும் -


மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

## மீனவர்ருக்கு வழங்கிய வாக்குறுதி மீறப்பட்டதால் இன்று போராட்டம்!

முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வரக்குறுதிகள் மீறப்பட்டுள்ளதமையால், கடற்றொழில் திணைகளத்திற்கு முன்பாக இன்று, வாயில் கறுப்புத் துணியின கட்டி மீனவர்கள் அமைதி எதிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மாதம் 2 ஆம் திகதி அப் பகதியில் இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையைக் கண்டித்து மீனவர்கள் பாரிய ஆர்ப்பாட்டமொன்றை மேற்கொண்டனர்.

இதனையடுத்து இது தொடர்பாக கடந்த ஓகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி முல்லைத்தீவு செயலகத்தில் மீன்பிடி அமைச்சர் விஜயமுனி சொய்சா உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் மீனவர்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.



அந்தக் கலந்துரையாடலையடுத்து சட்டவிரோதக் கடற்றொழில் செயற்பாடுகள் முல்லைத்தீவில் மேற்கொள்ள முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இந் நிலையில் தற்போது ஆறு வாரங்களுக்கு தற்காலிகமாக சட்டவிரோத சுருக்கு வலைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆகவே மீனவர்களுக்கு வாங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியே இன்றைய தினம் முல்லைத்தீவு கடற்றொழில் திணைக்களத்திற்க முன்பாக வாயில் கறுப்புத் துணி கட்டி அமைதி எதிர்ப்பு போராட்டத்தை மேற்கொள்ள வுள்ளனர் உள்ளூர் மீனவர்.

## கட்டுத் துப்பாக்கி மீட்கப்பட்டது

திருகோணமலை, செப்.17

திருகோணமலை - தலாவாய் காட்டுப் பகுதியில் மிருக வேட்டைக்காக பயன்படுத்தப்படும் கட்டுத்துப்பாக்கி கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலை பிராந்தியப் போதைப் பொருள் தடுப்பு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நேற்று இந்த பகுதியில் தேடுதலை மேற்கொண்ட போதே இந்த கட்டுத்துப்பாக்கி கிடைத்துள்ளது.

இந்த கட்டுத்துப்பாக்கி ஆயுதம் கிண்ணியா பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனக் கிண்ணியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## பிக்குவின் கொலைவெறி தாக்குதல்; பெண் உட்பட மூன்று பேர் படுகாயம்!

கொழும்பு, செப்.17

தம்புள்ளையில் விஹாராதிபதியின் கத்திக் குத்து காரணமாக மூன்று பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விகாரைக்கு அருகில் உள்ள காணியை துப்பரவு செய்து குப்பையை விகாரையில் போட்டமையால் மோதல் ஏற்பட்டது எனக் கூறப்பட்டது. மோதல் வன்முறையாக மாறியமையால் கத்திக் குத்து தாக்குல் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கத்தி குத்து தாக்குதலால் பொலிஸ் கான்ஸ்டபிள், அவரது மனைவி மற்றும் சகோதரன் காயமடைந்து தம்புள்ளை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தன்னை தாக்கினார் என கூறி விகாராதிபதியும் வைத்தியசாலையில் சேர்ந்துள்ளார்..

நேற்றுமுன்தினம் காலை தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளது என பொலிஸார் தெரிவித்துள்ளர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சிறுமி மீது துஷ்பிரயோகம்: இராணுவச் சிப்பாய் கைது!

சாலியவெவ - நீலபெம்ம பிரதேசத்தில் 13 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் இராணுவ படை வீரர் ஒருவர் சாலியவெவ பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் திருமணமானவர். 30 வயதுடையவர், நீலபெம்ம பிரதேசத்தை சேர்ந்தவர் என்றும், அவர் இரணைமடு இராணுவப் படைத் தளத்தில் பணிபுரிபவர் என்றும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விடுமுறைக்காக வீடு வந்திருந்த போதே இத்தகைய சம்பவம் நடைபெற்றுள்ள து என பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் பதிவாகியுள்ளது.

வன்முறைக்குள்ளான சிறுமி வைத்திய பரிசோதனை களுக்காக புத்தளம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான இராணுவச் சிப்பாயை புத்தளம் மேல் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான ஏற்பாடுகளை சாலியவெவ பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

## தினசரி ராசி பலன் (17.09.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் புரட்டாதித் திங்கள் 1 ஆம் நாள் திங்கட்கிழமை அஷ்டமித்திதி மாலை 5.44 மணி வரை பின்னர் நவமி. நட்சத்திரம்: மூலம் முழுவதும். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 7.32 மணி முதல் 9.03 மணி வரை.

**சுபநேரம்** - பகலட 12.03 மணி முதல் 1.33 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - திதி இல்லை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- மூலம்.

**'ஜோதிடமணி' பிரம்மஶ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் முன்னேற்றமடையும். பிள்ளைகளால் பெருமை. மகிழ்ச்சி உண்டாகும்.

**ரிஷபம்** சலனம் மிகுந்த நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்பத்தில் குழப்பம் உண்டாகும். முயற்சிகளில் தாமதமாகுமென்பதால் வெறுப்படையாமல் பொறுமையாக இருப்பது அவசியம்.

**மிதுனம்** மத்திம பலன்கள் காணப்படும். பொருள் வரவு சுமாராக இருக்கும். முயற்சிகள் தாமதமாகும். வியாபாரம் ஏற்றமும் இறக்கமுமாக நடக்கும். உடல் நிலையில் ரோகங்கள் உண்டாகும்.

**கடகம்** யோகமான் நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் நல்லுறவு நிலவும். வீடு. வாகன வசதிகள் பெருகும். புதிய தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரத்தில் அமோக லாபம் கிடைக்கும்.

**சிம்மம்** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். தொழிலில் உயர்வுகள் கிடைக்கும். ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும். பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேர்வார்கள்.

**கன்னி** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். குடும்பம் குழப்ப நிலையில் இருக்கும். வியாபாரத்தில் பொருள்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். உறவினர்கள், நண்பர்களால் வீண் தொல்லைகள் உண்டாகும்.

**துலாம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். குடும்ப அமைதி பேணப்படும். வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். சகோதர உறவு பலப்படும்.

**விருச்சிகம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். பழைய பிரச்சினைகள் சுமுகமாகத் தீரும். உத்தியோகத்தர்களுக்கு திறமையின் அடிப்படையில் உயர்வுகள் கிடைக்கும்.

**தனுசு** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். திட்டமிட்ட எந்தச் செயலும் வெற்றியைத் தரும். வியாபாரம் 'ஓஹோ' என்று நடக்கும்.

**மகரம்** குழப்பமான நாள். பொருளாதாரம் நலிவடையும். குடும்பப் பிரச்சினைகள் அதிகரிக்கும். செலவுகள் அதிகரிப்பால் மனம் சஞ்சலம் அடையும். பிள்ளைகளால் கவலை உண்டாகும்.

**கும்பம்** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். ஆடை. அணிமணிச் சேர்க்கை உண்டாகும். பெண்களுக்கு சுப காரியங்கள் நடக்கும்.

**மீனம்** விருத்தியான நாள். பொருளாதாரம் மேன்மை அடையும். செய் தொழில் முன்னேற்றம் அடையும். வியாபாரம் நல்ல விருத்தியடையும். மாணவர்கள் கல்வியில் விருத்தி அடைவார்கள்.

**சந்திராஷ்டம நாள்: கார்த்திகை 2ஆம், 3ஆம், 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ!

## பழ. நெடுமாறன் தெரிவிப்பு

கொழும்பு, செப்.17

மஹிந்த ராஜபக்ஷ முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கிறார் என பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்குவிஜயம்செய்திருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இறுதிக் கட்டப் போரின் போது, போர்க் குற்றங்கள் எதுவும் நடக்கவில்லை என்று இந்திய ஊடகங்களிடம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்று உலகத்தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறனிடம் கேள்வி எழுப்பியுள்ளது. இதற்கு பதிலளித்த பழ. நெடுமாறன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்–

இலங்கையில் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற போரில் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் நடந்தமை குறித்து, ஐ.நா. மனித உரிமை ஆணையம் குற்றம் சாட்டியிருக்கிறது. அதுகுறித்துபொது விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அப்போது ஐ.நா. மனித உரிமை ஆணையராக இருந்த நவநீதம் பிள்ளை, நேரடியாக இலங்கைக்குப் போய், நிலைமையை பார்த்துவிட்டு வந்து, அவர் வெளியிட்ட அறிக்கையிலும் அதைத்தான் வலியுறுத்தியிருக்கிறார்.

'பொதுவிசாரணை நடத்தப்பட வேண்டும். அப்பட்டமான மனித உரிமை மீறல்களும், போர்க்குற்றங்களும் இழைக்கப்பட்டுள்ளன. ஆகவே, இதுகுறித்து விசாரிக்க வேண்டும்' என்று சொன்னார்.

அப்போது இலங்கை ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ஷ ஐ.நா. மனித உரிமை ஆணையத்தை விசாரிப்பதற்கு அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்.

இப்போது 'போர்க்குற்றமே நடக்கவில்லை' என்று சொன்னால் எப்படி? ஐ.நா. மனித உரிமை ஆணையம் என்பது ஒரு தனி நபர் அல்ல. பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் அமெரிக்கா அங்குதீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கின்றது.

அதை மீறிப் போர்க்குற்றம் நடக்கவில்லை என்று சொன்னால், மனித உரிமை ஆணையத்தின் விசாரணைக் கமிஷனை அனுமதிக்க மறுப்பது ஏன்? போர்க்குற்றம் நடக்கவில்லை என்றால், தாராளமாக விசாரணை நடத்துங்கள் என்றுதானே சொல்லியிருக்க வேண்டும்.

பிரிட்டிஷ் கொமன்வெல்த் பிரதமர்களின் மாநாடு கொழும்பில் நடைபெற்றபோது, பிரிட்டன் பிரதமர் அங்குச் சென்றார். அவர் நேரடியாக யாழ்ப்பாணம் சென்றபோது, ஆயிரக்கணக்கான தாய்மார்கள் கூடி, தங்களின் கணவரைக் காணவில்லை, மகன்களைக் காணவில்லை என்று கூறி, புகைப் படங்களைக் காட்டி, புகார் செய்தார்கள்.

'கைது செய்து கொண்டு போகப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என்பதை சொல்ல மறுக்கிறார்கள்' என்று தெரிவித்தனர்.

பிரிட்டிஷ் பிரதமர் கொழும்பு திரும்பிய பின், ராஜபக்ஷவை அவர் கண்டித்தார். 'உடனடியாக அவர்கள் பற்றிய விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்' என்றார். லண்டனுக்குத் திரும்பிச் சென்ற பிறகும் கூட, பிரிட்டிஷ் பிரதமர் பகிரங்கமாக அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் இதை குற்றம் சாட்டிப் பேசினார். 'காணாமல் போனவர்கள் குறித்த பட்டியலை இலங்கை அரசு வெளியிட வேண்டும்' என்று வலியுறுத்தினார்.

இப்படியெல்லாம் சொன்ன பிற்பாடும் ராஜபக்ஷ, போர்க் குற்றங்கள் நடைபெறவில்லை என்று சொல்வது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கும் மழுப்பல் போன்றதாகும் என்று உலகத்தமிழர் பேரமைப்பு தலைவர் பழ. நெடுமாறன் குறிப்பிட்டுள்ளார்.






மனித உரிமைகளுக்கு எதிராக பொய்யான செய்திகளை வெளியிடுகின்றது எனக் கூறப்படும் ஊடகத்திற்குக் கண்டனம்வெளியிடும் மக்கள் பேரணி கடந்தவெள்ளிக் கிழமை பகல் யாழ். முஸ்லிம் கல்லூரி வீதியில் நடைபெற்றது.

(உ - 19)

படம். எம்.எல்.லாபிர்

# பேசாலையில் மறைக் கல்வி வாரப் பெருவிழா







மன்னார் மறைமாவட்டத்தில் பேசாலை புனித வெற்றிநாயகி ஆலய பங்கில் கடந்த வாரம் மறைக்கல்வி வாரமாக அனுஷ்டிக்கப்பட்டதுடன் நேற்று ஞாயிற்றுக் கிழமை இத்தினம் பெருவிழாவாகவும் கொண்டாடப்பட்டது.

பேசாலை பங்குத் தந்தையும் சட்ட முதன்மைக் குருவுமான அருட்பணி ச.தேவராஜா கொடுதோர் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்பணி கி.அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அவர் உதவி பங்கு தந்தை அருட்பணி பசில் கிளைன் அடிகளாருடன் ஒன்றிணைந்து கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கின்றமையையும் கலந்துகொண்டோரின் ஒரு பகுதி மாணவர்கள் மற்றும் பக்தர்களையும் படங்களில் காணலாம். (112)

# பிரபாகரனுக்கு சமனானது இந்த நல்லாட்சி அரசு!

## பிரசன்ன ரணதுங்க எம்.பி. காட்டம்



கொழும்பு, செப். 17

சர்வதேச தேவைக்கு ஏற்ப செயற்பட்டு வரும் இந்த நல்லாட்சி அரசு ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்சிலில் புதிதாக சமர்ப்பிப்பதற்கு இன்னும் என்ன யோசனைதான் எஞ்சியிருக்கின்றது எனவும், ஜனாதிபதி முன்வைக்கவுள்ளதாக கூறப்படும் புதிய பிரேரணை பிரச்சினைக்குரியது எனவும் கூட்டு எதிரணி தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பில் முக்கிய பிரேரணையொன்றை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் தாம் முன்வைக்கவுள்ளார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இந்த அரசு பிரபாகரனுக்கு சமனானது. கூட்டு எதிரணி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பொது மக்களுக்கு நஞ்சூட்டிய அரசு. மிகவும் கீழ்த்தர மான முறையில் செயற்படும் ஒரு அரசே இதுவாகும்.- எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மயங்கியவரை மீட்ட பொலிஸ் அதிகாரிகள்



மாத்தளையில் பாலம் ஒன்றுக்கு அருகில் மயங்கி விழுந்து கிடந்த முதியவரை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

வீதியில் விழுந்து கிடந்தவரை மீட்ட பொலிஸார் அவரை மாத்தளை வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

இந்த நபர் விழுந்து கிடப்பதனை அவதானித்த ஊடக வியலாளர் ஒருவர் மாத்தளை பொலிஸாருக்கு அறிவித்து துள்ளார்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸ் அதிகாரிகள் இருவர் இந்த நபரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

எனினும், மனிதாபிமானத்துடன் செயற்பட்ட இரு பொலிஸாரும் பாராட்டப்பட வேண்டியவர்கள் என மக்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர்.

## பொலிஸ் நிலையத்திற்குள் கத்திக்குத்து; பொலிஸ் உத்தியோகத்தர், பெண் காயம்!

அனுராதபுரம் - ஹொரவபொத்தானை பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து கத்திக்குத்து சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது. இதில் பாதிக்கப்பட்ட இருவர் அனுராதபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில், ஹொரவபொத்தானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் சரத் அமரசூரிய என்ற பொலிஸ் உத்தியோகத்தரும், கத்தி குத்தை நடத்தியவரின் மனைவியான முறகேவ, நானமில்லாவ பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய நிரோஷா குமாரி என்பவருமே பாதிக்கப் பட்டுள்ளனர்.

கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் ஏற்பட்ட குடும்பத் தகராறு காரணமாக, மனைவி பொலிஸ் அவசர அழைப்பு இலக்கமான 119 இலக்கத்திற்கு அழைப்பு விடுத்த நிலையில், கணவரைத் தேடிச் சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கணவர் தொடர்பாக வாக்குமூலம் வழங்கச் சென்ற மனைவியைக் கணவர் பொலிஸ் நிலையத்துக்குள் வைத்து கத்தியால் குத்த முற்பட்டுள்ளார்.

அதனை தடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட பொலிஸாருக்கும் கத்திக்குத்து விழுந்துள்ளது என தெரிய வருகிறது.

கத்தியால் குத்தியவரை பொலிஸார் கைது செய்து கெப்பிட்டிகொல்லாவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தியபோது எதிர்வரும் 25 ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் மொரகேவ, நானமில்லாவ பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய நைதாகே ரோஹன விஜயசூரிய எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கடும் வெப்பம்

### பல பிரதேசங்களைத் தாக்கும் ஊஷ்ணம்

இலங்கையின் பல பகுதிகளில் மிகவும் மோசமாக வெப்ப நிலை அதிகரித்துள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில பிரதேசங்களில் 37 பாகை செல்சியஸை வெப்ப நிலை கடந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கின் பல பிரதேசங்களில் வெப்ப நிலை 35 பாகை செல்சியஸ் வரை அதிகரித்துள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்திலேயே அதிக கூடிய வெப்ப நிலை பதிவாகியுள்ளது. பொலன்னறுவை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் 37.2 பாகை செல்சியஸ் வெப்ப நிலை பதிவாகியுள்ளதாக திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

வவுனியாவில் 37.1 பாகை செல்சியஸ், அனுராதபுரத்தில் 36.1 பாகை செல்சியஸ், மொனராகலையில் 36 பாகை செல்சியஸ் மற்றும் கொழும்பில் 31.6 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலை தொடர்பில் வைத்தியர்கள் விசேட கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

வெப்பத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள நாளாந்தம் ஆறு லீற்றர் நீர் அருந்த வேண்டும் என கொழும்பு தேசிய வைத்தியசாலையின் இயக்குநர் வைத்தியர் சமித்தி தெரிவித்துள்ளார்.

தற்போது அதிக வெப்ப நிலைமை காணப்படுகின்றது. இதனால் அதிகமாக நீர் அருந்த வேண்டியது அவசியமாகும். விசேடமாக ஒருநாளைக்கு 6 லீற்றர் நீரேனும் அருந்த வேண்டும்.

இந்த நாள்களில் சிறு பிள்ளைகளை வெளியில் விளையாட அனுமதிக்க வேண்டாம். நோய் ஏற்படுவதற்கான ஆபத்துக்கள் அதிகமாக உள்ளன. அடிக்கடி தண்ணீரில் உடலை நனைத்து வெப்பத்தை குறைத்துக் கொள்ள வேண்டும்.

இளநீர், தோடம்பழம் உள்ளிட்ட பானத்தை இந்த நாள்களில் அருந்துவது நன்மையாகும். அவசர வேலை காரணமாக வெளியே செல்வதென்றால் குடை கொண்டு செல்ல வேண்டும். இல்லை என்றால் தற்போதை காலநிலை காரணமாக கண்களுக்குப் பாதிப்பு ஏற்படக் கூடும். மதிய வேளையில் வெளியில் செல்வோர் உடலுக்கு பொருத்தமான கிறீம்களை பூசிக் கொள்ளவும். வெப்பம் தொடர்பில் அவதானமாக செயற்பட்டால் நோய்களில் இருந்து தப்பிக் கொள்ள முடியும். - என வைத்தியர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சிறுமியைக் கர்ப்பமாக்கிய 21 வயது இளைஞன் கைது

தலவாக்கலை நகரிலுள்ள உணவகம் ஒன்றில் தொழில் புரிந்த 14 வயதுடைய சிறுமியை துஷ்பிரயோகம் செய்து கர்ப்பமாக்கினார் எனக் கூறப்படும் 21 வயதுடைய இளைஞனை லிந்துலை பொலிஸார் நேற்று முன்தினம் கைதுசெய்துள்ளனர்.

இந்த இளைஞன் நுவரெலியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டபோது நீதிவான் அவரை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுமி நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவித்த பொலிஸார், மேலும் இந்த சிறுமி கர்ப்பமாக இருக்கிறார் என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது எனக் குறிப்பிட்டனர்.

## யானை தாக்கி இளைஞன் பலி

மட்டக்களப்பு, கோப்பாவெளி பகுதியில் யானை தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கோப்பாவெளி பகுதியைச் சேர்ந்த 24 வயதையுடைய ஞானப்பிரகாசம் சகாநாயகன் ஆவார்.

இவரது சடலத்தை மீட்டெடுத்த பொலிஸார் பிரேத பரிசோதனைக்காக சடலத்தை வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

# ஹக்கீமுடன் பொத்துவிலில் சந்திப்பு



கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர் சங்கம், பொத்துவில் ஹெட ஓய அபிவிருத்தி குழுவினர் மற்றும் பொத்துவில் சபையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் ஆட்சியமைக்க முன்வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர்கள் ஆகியோர் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம்மை பொத்துவில் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் சந்தித்து கலந்துரையாடி யுள்ளனர்.

இந்தச் சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவது தொடர்பாகவும், பொத்துவில் கோமாரி பிரதேசத்தில் வறட்சியான பிரதேசங்களுக்கு குடிதண்ணீர் பெற்றுக் கொடுத்தல் மற்றும் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சினால் அந்த உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யவேண்டிய நிதி தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

ஹெட ஓய திட்டத்தின் கீழ் குடிதண்ணீர் வழங்களுக்கான திட்ட வரைவு முடியும் தருவாயில் உள்ளதாகவும், திட்ட வரைவு தொடர்பான மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி நீர்ப்பாசன திணைக்களத்தில் நடைபெறவுள்ளதாகவும் அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் அப்துல் வாசித் மற்றும் பொத்துவில் பிரதேச சபை உறுப்பினர்கள் ஆகியோரும் இச் சந்திப்பில் கலந்துகொண்டுள்ளனர்.

# வடக்கு மாகாண வீதிப் புனரமைப்பு வேலை; சீனாவை வெளியேற்றி நுழைகிறது இந்தியா

கொழும்பு. செப். 17

வடக்கில் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த சீன நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட ஒப்பந்தத்தைக் கைவிட்டு விட்டு அதனை இந்திய நிறுவனங்களிடம் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

புவிசார் அரசியல் கரிசனைகளை அடுத்தே, இலங்கை அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்திருப்பதாக கூறப்படுகிறது.

ஆறு பொதிகளாக வடக்கு கிழக்கில், வீதிகளை அமைப்பதற்கு அனைத்துலக அளவில் கேள்விப் பத்திரம் கோரப்பட்டது. அதற்கு 44 விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

இதையடுத்து அமைச்சரவையினால், நியமிக்கப்பட்ட குழுவினால், இரண்டு பொதிகள், சினோஹைட்ரோ நிறுவனத்துக்கு வழங்கப்பட்டன. (இதில் ஒன்று வடக்கில், மற்றது கிழக்கில்)

ஏனையபொதிகள், CEC-NEM கூட்டு முயற்சி, கேடிஏ வீரசிங்க நிறுவனம், பொறியியலாளர் மற்றும் ஒப்பந்தகாரர் ஆலோசனை நிறுவனம், நவலோகா கட்டுமான நிறுவனம் ஆகியவற்றுக்கு அளிக்கப்பட்டன.

ஆனால், இந்தியாவின் எக்சிம் வங்கியின் ஊடாக, நிதியிட்டு வடக்கு மாகாணத்தில் சில வீதிகளை அபிவிருத்தி செய்யும் பணியை மேற்கொள்ள முடியும் என்றும், அதனை இந்திய நிறுவனங்களுக்கு வழங்குமாறும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக, இந்திய அதிகாரிகள் கோரியிருந்தனர்.



இது தொடர்பாக இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரும் செவ்வாயன்று அமைச்சரவையில் குறிப்பாணை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்தியத் தூதரகம் இரண்டு ஒப்பந்தகாரர்களை ஒழுங்கு செய்துள்ளது. ஒன்று இந்திய அரசுத்துறை நிறுவனமான இர்கோன் மற்றது.ஒரு பகுதி இந்திய அரசுத்துறை நிறுவனமான, IL - FS போக்குவரத்து வலையமைப்பு நிறுவனம்.

எனவே, வடக்கு மாகாணத்திலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதிகளைப் புனரமைப்பதற்காக சினோஹைட்ரோ நிறுவனத்துக்கு வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஒப்பந்தப் பொதியை இந்திய நிறுவனங்களில் ஒன்றுக்கு வழங்குவது விவேகமானதாக இருக்கலாம்.

சினோஹைட்ரோநிறுவனம் ஏற்கனவே கிழக்கு மாகாணத்தில், வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கான முதலாவது ஒப்பந்தப் பொதிக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணத்தில் குறிப்பாக சீன ஒப்பந்தகாரர்களின் தலையீடுகள் குறித்து இந்திய அரசாங்கம் அண்மையில் தீவிரமான கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தது.

இது ஒரு புவிசார் அரசியல் கரிசனையாக இருப்பதால், அண்டை நாட்டுடன், இலங்கை நல்லுறவைப் பேண வேண்டியுள்ளதைக் கருத்தில் கொண்டு, சரியான முடிவை எடுக்க வேண்டும்.

இதன்போது, கடந்த காலத்தில் இந்திய அரசாங்கத்தினால் இலங்கையின் சமூக - பொருளாதார அபிவிருத்திக்காக வழங்கப்பட்ட உதவி மற்றும் ஒத்துழைப்பையும் கருத்தில் கொள்ள வேண்டும் - என்றும் அந்த குறிப்பாணையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால், வடக்கில் சினோஹைட்ரோ நிறுவனம் வீதி புனரமைப்பு பணிகளை முன்னெடுக்க முடியாது.

இந்திய அதிகாரிகள் கோரியபடி, இரண்டு இந்திய நிறுவனங்களும் திட்டங்களை முன்வைப்பதற்கு அழைப்பு விடுக்க அமைச்சரவையின் அனுமதி கோரப்படவுள்ளது.

இவ்வாறு திட்டம் கோரப்படவுள்ள வீதிகளில், தலைமன்னார் தொடக்கம் வவுனியா ஊடாக திருகோணமலை வரையான - 208:6 கி.மீ வீதி முதலாவதாகும்.

அடுத்து, யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை வரையான வீதியாகும். இதற்கு இரண்டு தெரிவுகள் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து பரந்தன், முல்லைத்தீவு, கொக்கிளாய் பாலம் வழியாக திருகோணமலை வரையான, 196 கி.மீ. வீதி அல்லது, பருத்தித்துறை, மருதங்கேணி, கொக்கிளாய் பாலம் வழியாக, திருகோணமலைவரையான220.3 கி.மீ. வீதி என இரண்டு தெரிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# சட்டமா அதிபர் தரப்பு மீதும், சி.ஐ.டி.மீதும் எரிச்சலுடன் சீறிப் பாய்ந்த ஜனாதிபதி

## படைத் தரப்பினர்களின் கைதுகள் தொடர்பில் அவர் கடும் அதிருப்தி

கொழும்பு. செப். 17

சிறிலங்கா படை அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தொடர்பாக, இன்னமும் வழக்குகளைத் தாக்கல் செய்ய முடியாத நிலையிலேயே குற்றப்புலனாய்வுப்பிரிவும், சட்டமாஅதிபர்திணைக்களமும் இருக்கின்றனஎன, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிருப்தி வெளியிட்டுள்ளார்.



கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடக ஆசிரியர்கள், பிரதானிகளுடனான சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட அவர் -

இராணுவ அதிகாரிகளைக் கைது செய்து தடுத்து வைக்கிறார்கள். விசாரணை செய்து விட்டு குறிப்பிட்ட காலத்துக்குப் பின் விடுவிக்கிறார்கள். ஆனாலும், இன்னமும் எவருக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

லசந்த விக்ரமதுங்க படுகொலை, பிரகீத் எக்னெலிகொட கடத்தல், கீத் நொயார் கடத்தல், 11 இளைஞர்கள் கடத்தல் உள்ளிட்ட வழக்குகளில், 2015ஆம் ஆண்டு விசாரணைகள் தொடங்கப்பட்ட பின்னர், எந்தவொரு இராணுவ சந்தேக நபருக்கு எதிராகவும், ஒரு வழக்கேனும் தாக்கல் செய்யப்படவில்லை.

இராணுவத்தின் முன்னாள் இரண்டாம் நிலைத் தளபதியான, மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகரவை கைது செய்து 5 மாதங்கள் தடுத்து வைத்திருந்தார்கள். ஆனால் அவருக்கு எதிராக எந்த வழக்கும் தாக்கல் செய்யப்படவில்லை.

11இளைஞர்கள் கடத்தல் தொடர்பான வழக்கில் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகின.

அனைவரையும் தடுத்து வைத்திருப்பதாக குற்றப் புலனாய்வுப்பிரிவுகூறியது. ஆனால்அனைவரும்பிணையில்வெளியேவந்து விட்டனர். இதுவரை அவர்கள் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை.

ஒரு சந்தேக நபரை கைது செய்யவதில் இருந்து தடுத்தார் என்பதே, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி மீதான குற்றச்சாட்டு.

இரண்டுநாள்களுக்கு முன்னார் சட்டமா அதிபர், பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வுப் பிரிவு உயர் அதிகாரிகளைச் சந்தித்த போது, குற்றம்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதில் தோல்வியடைந்திருக்கின்றமை குறித்து அவர்களுக்குச் சுட்டிக்காட்டினேன்.

அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாவிட்டால், கைது செய்து தடுத்து வைக்கக் கூடாது என்று அவர்களுக்கு நான் கூறினேன்.

11 பேரையும் பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானி கொன்று விட்டார் என்ற அடிப்படையில் தான் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இராணுவ அதிகாரிகளைக் கைது செய்து தடுத்து வைத்து விடுவிக்கப்படுவதால், போர் வீரர்களை அரசாங்கம் வேட்டையாடுகிறது என்ற அவப்பழி ஏற்படுகிறது. - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# வியன்னா தூதரக அதிகாரிகளை கூண்டோடு மாற்றுகிறார் மைத்திரி

## தொலைபேசித் தொடர்பில் வரத் தவறியமைக்காக

வியன்னாவுக்கான இலங்கைத் தூதுவர் பிரியானி விஜேசேகரவையும், அங்குள்ள ஐந்து இலங்கைத் தூதுரக அதிகாரிகளையும் உடனடியாக நாடு திரும்புமாறு உத்தரவிட்டுள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

வியன்னாவில் இருந்த இலங்கைத் தூதுவர் பிரியானி விஜேசேகரவுடன் கடந்தவாரம், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேச 4 மணி நேரம் முயற்சித்தும், அது பலனளிக்கவில்லை என்று கூறப்படுகிறது.

கடைசியாக, அங்குள்ள காவல்காரர் தொலைபேசி அழைப்புக்குப் பதிலளித்துள்ளார். தூதரகத்தில் யாரும் இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

அதற்குப் பின்னர், குறிப்பிட்ட காவல் காரர், பிரியானி விஜேசேகரவுக்கு ஜனாதிபதியின் தொலைபேசி அழைப்புக் குறித்துத் தெரியப்படுத்திய போதும், அவர், தொடர்பை ஏற்படுத்த முயற்சிக்கவில்லையாம்.

இதையடுத்தே, கடந்த வெள்ளிக்கிழமை பிரியானி விஜேசேகர மற்றும், தூதரக அதிகாரிகளான தயானி மெண்டிஸ், ஜிகான் திசநாயக்க மற்றும் தூதுவரின் தனிப்பட்ட உதவியாளர் உள்ளிட்டவர்கள் கொழும்புக்கு திருப்பி அழைக்கப்பட்டுள்ளனர்.

விரைவில் புதிய தூதுவர் நியமிக்கப்படுவார் என்று



இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலரான பிரியானி விஜேசேகர ஓய்வுபெற்ற பின்னர், வியன்னாவுக்கான தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இவர்கள் நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டுள்ளனர் என்பதை இலங்கை வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மஹிஷினி கொலன்னே உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், எதற்காக திடீரென அழைக்கப்பட்டுள்ளனர் என்பதை அவர் விவரிக்கவில்லை.

காலைக்கதிர்
Kalaikkathir



# ஆட்சி மாறியும் காட்சி மாறவில்லை!

## மகாவலி அபிவிருத்தியின் பெயரால் தமிழரின் தாயகம் தொடர்ந்தும் சூறை



ஓர் இனத்திலுள்ள மக்களை அழிப்பது மட்டும் இன அழிப்பன்று. அம்மக்களை இனமாகக்காட்டும் கூறுகளை அழிப்பதும் இனவழிப்பே. தமிழர்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து, சிங்களவர்களை குடியேற்றி, தமிழர் பெரும்பான்மையை சீரழிக்க தென்னிலங்கை அரசாங்கம் காலத்திற்குக் காலம் செயற்பட்டுவருகின்றது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் முன்னாள் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்காவினால் மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் தமிழர் தாயகப் பகுதியான அம்பாறையில் கல்லோயாவை மறித்த அணை கட்டி அதன் ஊடாக 40ஆயிரம் ஏக்கர் விவசாயக் காணிகள் உருவாக்கப்பட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்ட நிலப்பரப்பில் 50 வீதத்திற்கும் அதிகமான சிங்கள் மக்கள் குடியேற்றப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக புதிய 50 கிராமங்கள் உருவாக்கப்பட்டன. அதன் பின்னர் படிப்படியாக தமிழ் மக்களின் வளமிகு நிலங்களை மாறி மாறிவந்த அரசாங்கங்கள் சிங்கள மக்களுக்கு வாரி வழங்கின.

கிழக்கில் திருகோணமலை மாவட்டத்தில் சேருவல, கந்தளாய் போன்ற பல தமிழ் கிராமங்கள் மகாவலி அபிவிருத்திட்டம் என்ற பெயரில் சூறையாடப்பட்டு சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்தகைய செயற்பாடு காரணமாக தமிழ் மக்கள் தமது செந்த நிலத்திலிருந்து வெளியேற்றபட்டு இன்று தமது பெரும்பான்மை பலத்தினை திருகோணமலையில் இழந்துள்ளனர்.

இவ்வாறு தமிழர் தாயகத்தில் அவர்களின் பெரும்பான்மை பலத்தை சிதைத்து, அவர்களின் பேரம்பேசும் சக்தியை நலிவடையச் செய்வதற்கான காரியங்கள் தொடர்ச்சி



யாக இடம்பெற்றதன் விளைவாகவே விடுதலைப் போராட்டம் உருப்பெற்றது.

விடுதலைப் போராட்டம் இடம்பெற்ற காலங்களில் தமிழ் மக்களின் வளமிகு காணிகளை இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் வைத்திருந்த அரசாங்கம், இன்று அவற்றை மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் அபகரிக்க முற்படுகின்றது. 1948 ஆம் ஆண்டு ஆரம்பித்த ஆக்கிரமிப்பு 2018 இலும் தொடர்வது தான் தமிழ் மக்களின் துன்பியல் வரலாறு.

ஆட்சி மாறினாலும் காட்சி மாறுவதில்லை என்ற தமிழ் மக்களின் எண்ணப்பாட்டை நல்லாட்சியும் செய்து கொண்டிருக்கின்றது. வெளிநாடுகளின் கண்துடைப்பு இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள சில ஏக்கர் காணிகளை விடுவிடுத்துக் கொண்டு மறுபுறத்தில் மகாவலி அபிவிருத்தி என்ற போர்வையில் கையகப்படுத்த முற்படுகின்றது.

மகாவலி அபிவிருத்தியைப் பொருத்த மட்டில் தமிழ் மக்களுக்கு எந்தவித இலாபமும் இல்லைமாறாக அவர்களின் வாழ்வில் சாபக்கேடாகவே அது இருக்கின்றது. அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மகாவலி எல் வலயம் தொடர்பில் விரிவாக ஆராய்வோம்.

தற்போது செய்துமுடிக்க திட்டமிடப்பட்டுள்ள மகாவலி எல் வலயத்திட்டம் தமிழர் மீது நடாத்தப்படும் மற்றுமொரு கட்டமைக்கப்பட்ட இன அழிப்பாகும். மகாவலி அபிவிருத்தி அதிகாரசபையானது 1970 பெப்ரவரி 28ஆம் திகதி உருவாக்கப்பட்டது. மகாவலி எல் வலயம் 1988 ஏப்ரல் 15ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலமும் 2007 மார்ச் 09ஆம் திகதி எல்லைகளை விஸ்தரித்து இரண்டாவது வர்த்தமானி அறிவித்தல் மூலமும் பிரகடனப்படுத்தப் பட்டது.

இதனுடைய எல்லைகளை விரிவாக்கம் செய்யும் அது முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் மட்டுமல்லாமல் மாங்குளம் வரைவியாபித்துள்ளது. 1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இராணுவத்தினரால் ஒலி பெருக்கி மூலம் அறிவித்து, நாயாற்றுக்குத்தெற்கே தமிழ் மக்களின் எல்லைக் கிராமங்களான கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய்தெற்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் வடக்கு ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலும் தமிழ் மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இவ்வாறு தமிழ் மக்களை வெளியேற்றி அரசாங்கம் சிங்களவர்கள் இல்லாத முல்லைத்தீவு மாவட்டத்தில் மணலாறு என அறியப்படும் தமிழ் மக்களின் 2000 ஏக்கருக்கு மேலான பாரம்பரிய நிலப் பகு தியில் சிங்கள மக்கள் குடியேற்றியது. அது வெலிஓயா எனப் பெயர் மாற்றப்பட்டது.

வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் சுமார் 3336 குடும்பங்களைச் சேர்ந்த 1189 சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் இடம்பெயர்ந்த மக்கள். யுத்தம் முடிவடைந்த பின்னர் தமது சொந்தநிலங்களுக்குசென்று குடியேறலாம் என்ற எண்ணத்தில் 2011 ஆம் ஆண்டு அந்தப் பகுதிகளுக்குச் சென்ற போது, அவர்களின் நிலத்தில் பெரும்பான்மை இனத்தினர் வாழ்ந்து கொண்டிருக்கின்றமையைக் கண்டு அதிர்ச்சியடைந்தனர்.

தமிழர்கள் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்த, பயிர் செய்த, வாழ்வாதாரங்கள்பெற்ற தமது நிலங்களைப் பறிகொடுத்த நிலையில் தமக்கு இழைக்கப்பட்ட அநீதி குறித்து அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்த போதிலும் எந்த தீர்வும் கிடைக்கவில்லை.

இதேவேளை கடந்த 1950, 1960, 1970 காலப்பகுதிகளில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட இதே காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள் தமிழர்களிடம் இன்றும் உள்ளன. ஆனாலும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் ஒப்பமிடப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் அவரின் பிரதிநிதியினால் மயில்குளம் (இப்போதைய பெயர் மொனரவெள) பகுதியில் வைத்து சிங்கள மக்களுக்கு வழங்கப்பட்டது.

வெலியோயா பிரதேச செயலாளர் பிரிவை மையப்படுத்தி வட மத்திய, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் எல்லைகளை உள்ளடக்கிய வகையிலே மகாவலி எல் வலயத்திட்டம் அமைகின்றது.

தமிழ் மக்களின் பாரம்பரிய நீர்ப்பாசனக்குளங்களான, இராமன் குளம், கொட்டோடைக்குளம், ஓயாமடுக்குளம், வெள்ளாங்குளம் ஆகிய குளங்களை உள்ளடக்கி பாரிய நீர்ப்பாசனத்திட்டமாக இந்த எல் வலயம் எனப்படும் கிவுல் ஓயாத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

6000 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சக்கூடிய இந்த நீர்ப்பாசனத்தின் மூலம் 3000 சிங்களக் குடும்பங்களுக்கு தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தலைமையிலான நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை. என அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியிருக்கும் கருத்து தமிழ் மக்கள் பெருமை அடையக்கூடிய அல்லது மகிழ்ச்சியடையக் கூடிய கருத்தல்ல. இதே நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்திலேயே முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களின் எல்லையில் பாரியளவிலான சிங்களக் குடியேற்றத்தை உருவாக்கும் நோக்குடன் 'கிபுல் ஓயா' திட்டம் கொண்டுவரப்பட்டது.

பின்னர் வெள்ளைக்கல்லடி என்ற பகுதியில் சிங்கள மக்கள் குடியேற முயற்சித்த நிலையில் தமிழ் மக்கள் காட்டிய எதிர்ப்பினால் அது நிறுத்தப்பட்டது.

அதேபோல் சிவந்தாமுறிப்பு என்ற பகுதியில் அண்மையில் சிங்கள மக்கள் கனகரக வாகனங்களுடன் வந்து குடியேற முயற்சித்த நிலையில் அதுவும் தமிழ் மக்களுடைய கடுமையான எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. இவ்வாறு பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

மேலும் மகாவலி அதிகாரசபை ஊடாக காணிகளை அபகரிப்பதற்கு மேலாக வனவள திணைக்களம், தொல்லியல் திணைக்களம், வனசீவராசிகள் திணைக்களம் என பல வடிவங்களில் இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுடைய பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளன.

இதேபோல் 1988ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி மகாவலி அதிகார சபையின் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து 2007ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09ஆம் திகதி மகாவலி அதிகார சபையின் மீள் எல்லை நிர்ணயம் செய்யப்பட்டது. அதனை செய்தவர் வேறு



யாருமல்லர். இப்போதைய ஜனாதிபதியும் அப்போதைய மகாவலி அபிவிருத்தி அமைச்சருமான மைத்திரிபால சிறிசேனாவே. இதன் ஊடாகவே முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களிலும், வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமங்களிலும் உள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான பாரம்பரிய தமிழ் கிராமங்கள் சிங்கள மயமாக்கப்பட்டன.

இரு போகங்களும் நெற் செய்கை நடந்த பல ஆயிரக் கணக்கான விவசாய நிலங்கள் சிங்கள மக்களுக்கு தாரைவார்க்கப்பட்டன. இதனால் அந்த நிலங்களுக்குச் சொந்தமான மக்கள் நிர்க்கதியாக நிற்கிறார்கள். இத்தனைக்கும் காரணமான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா, தான் அடாத்தாக தமிழர் நிலங்களை ஆக்கிரமித்து குடியேற்றிய சிங்கள மக்களுக்கு நிதந்தரக் குடியிருப்புக்கான காணி உத்தரவுப் பத்திரங்களை இன்று வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

இவ்வாறு மகாவலி எல் வலயத்திட்டம் அமைகின்ற போது - முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்ட எல்லைகள் துண்டாடப்படுகின்ற போது, வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான தொடர்பு துண்டிக்கப்பட்டு, தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனிமைப்படுத்தப்படும். முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவின் பெரும் பகுதிகள் மகாவலி அரசரணையின் கீழ் ஏற்கனவே மகாவலி எல் வயலத்திற்குள் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் மகாவலி தனது நடவடிக்கைகளை மணலாறு பிரதேச செயலாளர் பிரிவோடு மட்டுப்படுத்தியிருந்துள்ளமை இதன் பாதிப்பை மேலும் வலுவாக்குகின்றது.

அண்மையில் கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் மற்றும் கொக்கிளாய் பகுதிகளில் சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 8 சிங்கள மீனவர்களுக்கு மகாவலி அதிகாரசபையினால் காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டதனூடாக மகாவலி அதிகார சபையானது கரைதுறைப்பற்று பிரதேச செயலகப் பிரிவினுள் தனது காணி அதிகாரத்தினை பிரயோகிக்க ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முகாவலி எல் வலய மற்றும் முன்மொழியப்பட்டுள்ள மகாவலி கே மற்றும் ஜெ வலயங்கள் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கும் வட மாகாணத்தின் சனத்தொகையை கட்டமைக்கப்பட்ட ரீதியில் மாற்றியமைப்பதற்குமான அரசின் முயற்சியாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றனர். மேலும் தொல்லியல் திணைக்களம் திட்டமிட்ட வரலாறறுத் திரிபுகளை மேற்கொள்வதோடு தமிழர்களின் கலாசார மற்றும் சமய முக்கியத்துவம் மிக்க இடங்கள் பழைமை வாய்ந்த பௌத்த விகாரைகளாக உண்மைக்குப் புறம்பாக பிரகடனப்படுத்தி வருகிறது. செம்மலை நீராவி பிள்ளையார் ஆலய பழைமை வாய்ந்த பௌத்த விகாரையாகப் பிரகடனப்படுத்தப்பட்டமை அண்மைய உதாரணமாகும்.

இவ்வாறு பல்வேறுவிதமான முல்லைத்தீவு மக்களுக்கு பாதிப்புக்களை கொடுத்து வரும் அரசாங்கத்தின் செயற்பாடுகளை உடனடியாக நிறுத்துமாறு வலியுறுத்தி, தமிழ் மக்களைப் பிரதிநித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகள், சமூக அமைப்புக்கள், மதகுருமார், சிவில் செயற்பாட்டாளர்கள், சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், பொது மக்கள் எனப் பலரும் ஒன்று கூடி கடந்த ஓகஸ்ட் மாதம் 26 ஆம் திகதி பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது மகாவலி எல் வலய அபிவிருத்தியை உடனடியாகக் கைவிடுவதுடன், ஏற்கனவே சிங்கள மீனவர்களினால் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள கொக்குளாய் கடற்பகுதியை விடுவிக்குமாறும், ஜனாதிபதி மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கைவிடுக்கப்பட்டது. தமிழ் மக்களின் வாக்குகளில் ஆட்சியமைத்துக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமிழ் மக்களின் வாழ்க்கை, அவர்களின் எதிர்கால வாழ்வு மற்றும் வாழ்வாதாரத்தை பாதிக்காத வகையில் நடவடிக்கை எடுப்பதே அவர் தமிழ் மக்களுக்குச் செய்யும் நன்றிக்கடனாகும்.

மேலும் அரசாங்கம் மகாவலி எல் வலய அபிவிருத்தியைக் கைவிட்டு தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களைப் பாதுகாக்கும் வகையில் தமிழ் அரசியல் தரப்பினர்கள் சகல பேதங்களையும் கடந்து ஓரணியாக நின்று செயற்பட வேண்டும் என தமிழ் மக்கள் ஏகோபித்த குரல் எழுப்பிக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நன்றி :- 'ஆதவன் இணையம்'

# குழந்தைகளின் பார்வையை பாதிக்கும் விடயங்கள்...!



'குழந்தைகளின் கண் பார்வையைப் பாதிப்பதில், இரசாயனப் பொருள்களுக்கு அதிக பங்கு இருக்கிறது' என்று எச்சரிக்கிறார்கள் மருத்துவர்கள். நாம் அன்றாடம் பயன்படுத்தும் சுண்ணாம்பு, அறைகளைச் சுத்தம் செய்யப் பயன்படுத்தும் அமிலங்களே குழந்தைகளின்பார்வையைப்பறித்துவிடுகின்றன என்கிறார்கள் மருத்துவர்கள். சிறு கவனமின்மை கூட குழந்தைகளின் பார்வைத் திறனைப் பறித்து விடும் ஆபத்து இருக்கிறது என்றும் எச்சரிக்கிறார்கள் அவர்கள்.

“ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் தாம் இரசாயனங்களால் அதிக பாதிப்புக்கு உள்ளாகின்றனர். அவர்கள்மீது பெற்றோர் அதிக கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். குழந்தைகள் தனிமையில் இருக்கும் நேரங்களில்தாம் அதிக பாதிப்பு ஏற்படும். உதாரணமாக, விளையாடும்போது கண்களில் குத்திக்கொள்வது, அதிகமாகக் கசக்குவது, தூசு இருக்கும் பொருளைத் தொட்டுவிட்டு அப்படியே கண்களைத் தொடுவது, ஏதேனும் திரவத்தை கண்களில் ஊற்றிக்கொள்வது, குச்சிகளைக் கண்களுக்குள் விட்டு விழித்திரையில் குத்திக்கொள்வது போன்ற செயல்களில் தனிமையான நேரங்களில் தாம் குழந்தைகள் செய்வார்கள்.

சுண்ணாம்பு, கழிவறையைச் சுத்தம் செய்ய வைத்திருக்கும் அமிலங்கள் அல்லது கிளீனர்கள், ப்ளீச்சிங் பவுடர், குளிர்பானங்கள் போன்றவற்றை எப்போதும் குழந்தைகளின் கைக்கெட்டாதவாறு வைக்கவேண்டும். மிகவும் ஆபத்தான பொருள் சுண்ணாம்புதான். காரணம், அதிலுள்ள அசிட் மற்றும் அல்கலி (Alkali) என்ற இரசாயனப் பொருள்.

கண்களின் விழித்திரையில் அசிட்டோ, அல்கலியோ படும்பட்சத்தில், கருவிழிகளுக்குள் அவை ஊடுருவத் தொடங்கிவிடும். உடனடியாகச் சிகிச்சை எடுத்துக்கொள்ளாவிட்டால் ரசாயனங்கள் கண்களுக்குள் தங்கி அழற்சிப் பிரச்சினைகளை ஏற்படுத்தும். கண்களில் வறட்சி ஏற்படுவது, சிவந்து போவது, அரிப்பு ஏற்படுவது போன்றவை அழற்சிக்கான அறிகுறிகளாகும். இதனால் கருவிழிகள் கடுமையாகப் பாதிக்கப்படும்.

இதுபோன்ற பாதிப்புகள் ஏற்படாமலிருக்க, கண்களில் இரசாயனம் பட்டவுடன் தொடர்ச்சியாக அரை மணி நேரம் கண்களை நன்றாகக் கழுவவேண்டும். முதல் 30 நிமிடங்களில் என்ன செய்கிறோம் என்பதுதான் பாதிப்பின் தன்மையைத் தீர்மானிக்கும். எனவே, கப் நிறையத் தண்ணீர் எடுத்து அதில் கண்களைத் திறந்தபடி வைத்து சுத்தம் செய்ய வேண்டும். குளிர்ந்த நீராக இருந்தால், நல்லது. இமையை முடிந்தவரை திறந்து கண்களுக்குள் நீர் செல்லும்படிச் செய்யவேண்டும். கண்களுக்குள் செல்லும் நீர், சுண்ணாம்புப் பவுடரை கரைத்து வெளியே தள்ளிவிடும். சுண்ணாம்பிலுள்ள பெரிய பகுதிகள் இமைகளுக்கு அடியில் தங்கிவிடும் என்பதால், அரைமணி நேரம் கண்களை சுத்தப்படுத்திய பிறகு மருத்துவரிடம் செல்லவேண்டும்.

கண் பார்வையில் குறைபாடுகள் எதுவும் இருந்தால், ஆறு மாதத்துக்கு ஒருமுறை பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். இல்லாதபட்சத்தில், வருடத்துக்கு ஒருமுறை பரிசோதிக்க வேண்டும்.

கண்களில் படும் இரசாயனத்தை (Chemical Burns) கவனிக்காமல் விட்டுவிடக் கூடாது. முதல் நிலையிலேயே சரிசெய்யாவிட்டால், வாழ்நாள் பாதிப்புகள்கூட ஏற்படலாம்.

குழந்தைகளை, பெற்றோர் மின்திரைகளுக்கு அடிமையாக்கிவிட வேண்டாம். இது அவர்களுக்குப் பார்வை தொடர்பான பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடும்.

# அழகான பூக்கள் பற்றிய ஓர் பார்வை!

01.தீக்குச்சி பூக்கள் (matchstick flower)



பிங்க் நிறக்குச்சியின் தலைப்பக்கம் நீலவண்ண மருந்து பூசிய தீக்குச்சி மத்தாப்புகளை ஒரு கம்பியில் கோத்து அடுக்கினாற் போன்ற அழகு. அதனாலேயே இதற்கு தீக்குச்சி (matchstick flower)பூக்கள் என்று பெயர்.

நுனியிலிருக்கும் நீலமொட்டுகள் விரியும்போது இன்னும் அழகு. அர்ஜென்டினா பிரேசில் நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்ட இவை ப்ரோமெலியாட் வகையைச் சேர்ந்தவை. ஒருமுறை ஊன்றி விட்டால் போதும்.. அதன்பின் அதிக கவனிப்பு தேவைப்படாமல் வளரக்கூடியது. மேலும் இதன் ஓடுதண்டுகள் மூலம் தானே பதியன் போட்டு புதுச்செடிகளை உருவாக்கிக்கொள்ளும். பூக்கள் செடியில் மட்டுமல்லாது பூச்சாடி பூங்கொத்து அலங்காரங்களிலும் வசீகரிக்கின்றன.

02. யூகலிப்டஸ் பூக்கள் (red flowering gum)



சுமார் 700 இற்கும் மேற்பட்ட யூகலிப்டஸ் வகைகள் உள்ளன. அவற்றுள் பெரும்பான்மையானவை ஆஸ்திரேலியாவைத் தாயகமாகக் கொண்டவை. மிகக் குறைந்த எண்ணிக்கையில் சுமார் 15 வகை மட்டுமே இந்தோனேஷியாவையும் பப்புவா நியூகினியையும் சேர்ந்தவை.

குங்குமச்சிமிழ் போன்ற யூகலிப்டஸ் பூவின் மொட்டுகள் வளர்ந்து பூக்கும் சமயம் மூடி மட்டும் தானாகத் திறந்து கீழே விழுந்துவிடும். பிறகு பூ மலரும். கிரேக்க மொழியில் eu என்றால் நன்றாக என்றும் kalypto என்றால் மூடிய என்றும் பொருளாம். நன்கு மூடி போட்ட மொட்டுகளைக் கொண்டிருப்பதால் இதற்கு eucalyptus என்று பெயரானதாம். யூகலிப்டஸ் மரத்திலிருந்து கோந்து வெளிப்படுவதால் இதற்கு கோந்து மரம் (gum tree) என்ற செல்லப்பெயரும் உண்டு. வெள்ளை, பழுப்பு வெள்ளை, மஞ்சள், பிங்க், சிவப்பு வண்ணங்களில் பூக்கள் காணப்படும்.

03.கற்றாழை பூக்கள் (aloe vera flowers )



கற்றாழை(aloe) குடும்பத்தில் சுமார் 700 வகைகள் உள்ளன.

அவற்றுள் ஆலோவெரா (aloe vera )எனப்படும் சோற்றுக்கற்றாழை அதிகளவில் மருத்துவகுணம் கொண்டது.

பூச்சிக்கடி ,தேமல், தோல் வறட்சி, அரிப்பு, தீக்காயம், பொடுகு தொல்லை ,அந்தரங்க உறுப்புகளில் ஏற்படும் புண்கள் இன்ன பிற சருமப் பிரச்சினைகளுக்கும் நீரிழிவு ,மலச்சிக்கல், குடற்புண், தண்டுவடப் பிரச்சினைகள் போன்ற உடலின் உட்பிரச்சனைகளுக்கும் மருந்தாக இன்னும் ஏராளமான நன்மைகளைக் கொண்டு சர்வரோக நிவாரணி யாகப் பயன்படுகிறது.

கற்றாழைகள் பூத்து நம்மில் பலரும் பார்த்ததில்லை. பொதுவாக சோற்றுக்கற்றாழைகள் நான்காம் வருடத்திலிருந்து பூக்க ஆரம்பிக்கும். நல்ல வளமான மண் கற்று சூர்ய ஒளி இருந்தால் வருடத்துக்கு இரண்டுமுறை கூட பூக்கும்.குழாய் வடிவப் பூக்களில் அலகை நுழைத்து தேனருந்தும் பறவைகள் முகம் முழுக்க மகரந்த மஞ்சள் பூசி வெளிவருவது பார்க்க வெகு அழகு

04 . கங்காரு பாத மலர்கள் (kangaroo paw flowers)



பூங்கொத்துகளில் பயன்படுத்தப்படும் இந்தப் பூக்கள் பார்ப்பதற்கு ரோமத்துடன் கங்காருவின் விரிந்த பாதவிரல்களைப் போன்று இருப்பதால் கங்காரு பாத மலர்கள் எனப்படுகின்றன.

ஆஸ்திரேலியத் தாவரமான இவற்றின் பூக்கள் அமெரிக்கா ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தாவரவியல் பெயரான (anigozanthos) என்பதற்கு ஒழுங்கற்றப் பூக்கள் என்று பொருள்.மொத்தம் உள்ள பதினோரு வகையில் இது (yellow mist)எனப்படும் மஞ்சள் பூ வகை.

கொத்துக் கொத்தாய் மலர்ந்து நிற்கும். இவற்றின் தேனையருந்த போட்டிபோட்டு வரும் பறவைகள் மூலமே மகரந்தச்சேர்க்கை நடைபெறுகிறது.

# இது எந்த நாடு?




கீழே உள்ள 10 குறிப்புகள் ஒரு குறிப்பிட்ட நாட்டைக் குறிக்கின்றன. அந்த நாடு எது என்பதைக் கண்டுபிடியுங்கள்.

1. வட ஐரோப்பாவிலுள்ள ஒரு தீவு நாடு.
2. நோர்டிக் (Nordic) நாடுகள் என்று அழைக்கப்படுபவற்றில் ஒன்று.
3. நாட்டின் மொத்தப் பரப்பில் 11% பனியால் சூழப்பட்டிருக்கிறது.
4. இது எரிமலைகளின் நாடு. 200 எரிமலைகள் உள்ளன. வெந்நீர் ஊற்றுகள் அதிகம்.
5. இங்கிருந்து ஏராளமான புத்தகங்களும் பத்திரிகைகளும் வெளிவருகின்றன.
6. இந்த நாட்டுக் கொடியில் இருக்கும் சிவப்பு எரிமலையையும் வெள்ளை பனியையும் நீலம் கடலையும் குறிக்கின்றன.
7. இந்த நாட்டின் வடக்கு பகுதியில் கோடைக் காலத்தில் 72 நாட்களுக்குச் சூரியன் மறைவதில்லை.
8. இலவசமாகக் கல்வி வழங்கப்படுகிறது.
9. இந்த நாட்டின் தலைநகர் ரெக்யவிக்.
10. ஆர்டிக் நரி, பனி மான், பஃபின் பறவை, கம்பளி ஆடு, திமிங்கிலம் போன்றவை இந்த நாட்டின் முக்கியமான உயிரினங்கள்.

விடை:-ஐஸ்லாந்து

# நிறம் தீட்டலாம் வாங்க...!!



# புலிகளின் மூத்த தலைவர் ரமேஷ் சரணடைய முன் தமக்குத் தகவல் அனுப்பினார் என்கிறார் எஸ்.பி.

## அதன் பின்னரே அவர் கொல்லப்பட்டிருக்கிறார்



விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் ரமேஷ் ராணுவத்தினரிடம் சரணடைய முன்னதாகத் தனக்குத் தகவல் அனுப்பியிருந்தார் என எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரக்கட்சியில் இருந்து பதவிகளை ராஜினாமாச் செய்த 15 பேர் அணியின் ஊடக சந்திப்பொன்றில் அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ள நிலையில் அது தொடர்பான வீடியோ காணொலியுடன் இணையத்தளம் ஒன்று செய்தி வெளயிட்டுள்ளது.

அந்த காணொலியில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க மேலும் குறிப்பிட்டவை வருமாறு :-

விடுதலைப் புலிகளின் கேணல் ரமேஷ் என் நெருங்கிய நண்பர். அவர் ராணுவத்தினரிடம் சரணடைய பத்து நிமிடம் முன்னதாக எனக்கு குறுஞ் செய்தியொன்றை அனுப்பியிருந் தார்.

பின்னர் அவர் கொல்லப்பட்டிருந் தார். இதே போன்று ஏராளம் பேர் சரணடைந்தனர். பலர் கொல்லப்பட்டனர். இந்த வரலாறு உங்களுக்கும் தெரியும். எனக்கும் தெரியும் - என்றார்

முன்னாள் ராணுவத் தளபதியும் இந்நாள் அமைச்சருமான சரத் பொன்சேகாவை சிக்கலில் மாட்டி விடும் நோக்கிலேயே அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார் என்று கொழும்பு நியூஸ்டுடே செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இதற்கிடையே முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ஷவுக்கு எதிராக போர்க்குற்றங்கள் தொடர்பான சில விடயங்களை கசிய விட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தரப்பும் தயாராகி வருவதாகவும் நம்பகமான தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன எனவும் கூறப்பட்டது.

# குளவிக் கொட்டுக்கு இலக்கான சிறுவர்கள் வைத்தியசாலையில்!

திருகோணமலை மீகஸ்வெவ பகுதியில் குளவி கொட்டுக்கு இலக்கான மூன்று சிறுவர்கள் நேற்று மகாதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதால் சிறார்கள் ஒன்றிணைந்து விளையாடிக் கொண்டிருந்தபோது வீட்டுக்குப் பின்னால் குளவிக் கூடு இருப்பதை அவதானித்துள்ளனர்.

குளவிக்கூடு இருப்பதை அவதானித்த சிறுவர்களில் ஒருவன் தேன்கூடு இருப்பதாக கூறி மற்றைய சக நண்பர்களையும் அழைத்துக் கொண்டு சென்றுள்ளார்.

அங்கு சென்று இவர்கள் அனைவரும் விளையாட்டாக முகத்தை கட்டிக்கொண்டு குளவிக்கூட்டை கலைத்துள்ளனர். இதன் போது அங்கிருந்த ஐந்து சிறுவர்களில் மூவருக்குக் குளவி கொட்டியுள்ளது.

குளவி கொட்டுக்கு இலக்கான மூன்று சிறுவர்களும் மகாதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உள்ளனர்.

# ஜனாதிபதியைக் கொல்ல முயற்சி: விசாரணைக்கு சு.க. வலியுறுத்து



கொழும்பு, செப்.17

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்குத்திட்டம்வகுக்கப்பட்டுள்ளது என்று வெளியாகியுள்ள தகவல் குறித்து உடனடியாக விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஜனாதிபதியையும், பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபாய ராஜபக்ஷவையும் கொலைசெய்வதற்குத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ள கருத்தானது தெற்கு அரசியலில் பெரும் பரபரப்பைக் கிளப்பிவிட்டுள்ளது.

ஊழல் எதிர்ப்பு இயக்கத்தினாலேயே பிரதிப் பொலிஸ்மா அதிபரின் குரல் பதிவு வெளியிடப்பட்டுள்ளது. இது குறித்து அரசியல் பிரமுகர்கள் பல கோணங்களில் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே விசேட விசாரணை அவசியம் என்று சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரான பேராசிரியர் ரோஹன லக்ஷ்மன்பிரியதாஸ தெரிவித்தார்.

இதை சாதாரண விடயமாகக் கருதிவிட முடியாது. விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படவேண்டும்.

விசாரணைகளின் முடிவின் பின்னரே இதன் பின்னணி குறித்து அறிய முடியும்.- என்று அவர் மேலும் கூறினார்.

# மகனை மன்னராக்க வேண்டும் என்பதே மஹிந்தவின் நோக்கம்!

## அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, மக்களை மன்னராக்க முயற்சிக்கவில்லை. அவரது மகனை மன்னராக்க வேண்டும் என்பதே அவரது நோக்கம் என அமைச்சர் கயந்த கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் 'இந்து' பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் அளித்த பதில்கள் மூலம் இது தெளிவாகியுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நீங்கள் என்ன செய்ய போகிறீர்கள் என 'இந்து' பத்திரிகையின் ஊடகவியலாளர் கேட்கிறார். இதற்கு பதிலளிக்கும்முன்னாள் ஜனாதிபதி, நான் கட்சிக்குத் தலைமை தாங்குவேன். நான் போட்டியிடுவது தொடர்பில் பிரச்சினை இருக்கின்றது. இரண்டு முறைக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக பதவி வகிக்க முடியாது. இதனால் எனக்கு போட்டியிட முடியாது. எனினும் நான் முயற்சிக்கின்றேன் என்று கூறியுள்ளார்.

அப்படிமுடியாமல்போனால் உங்களது வேட்பாளர் யார், குடும்பத்தை சேர்ந்தவரா அல்லது வெளியில் இருப்பவரா என ஊடகவியலாளர் கேட்கிறார்.

இவ் விடயத்தில் இலங்கையில் ஒளிந்து விளையாட்டுக் காட்டி வரும் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவில் உண்மையைக் கூறியுள்ளார்.

மஹிந்தவின் நோக்கம் மக்களை மன்னராக்குவது அல்ல. மகனைமன்னராக்குவதே அவரது நோக்கம். மகனை மன்னராக்குவதற்காகவே காலத்தைக் கடத்தி வருவதை அவர் தெளிவுபடுத்தினார்.

முன்னாள் ஜனாதிபதிக்கு ஆதரவாக கொழும்பு உட்பட பகுதிகளுக்கு சென்று வெயிலில் வாடும் மக்களுக்கு, அவரது உண்மையான நோக்கம் என்ன என்பதை இந்தியாவில் வைத்து தெளிவாக கூறியுள்ளார்.- எனவும் கயந்த கருணாதிலக்க குறிப்பிட்டுள்ளார்.

# அமைச்சர் ஹிஸ்புல்லா மீதும் மகன் மீதும் வழக்குத் தாக்கல்

இராஜாங்க அமைச்சர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா மற்றும் அவரது மகன் ஹிராஸ் ஹிஸ்புல்லா ஆகியோர் மீது, மட்டக்களப்பு, வாழைச்சேனைநீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

15 கோடி ருபா பெறுமதியான நிர்மாணப் பணிகளுக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பான மோசடியில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் மீது கடந்த 14 ஆம் திகதி வாழைச்சேனை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் மற்றும் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால்செய்யப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைய, இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி இவர்களை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தும்படி நீதிவான் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

# இலங்கையை வந்தடைந்த தென்னிந்தியக் கலைஞர்கள்

எம்.ஜி.ஆரின் நினைவுதின நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக தென்னிந்தியக் கலைஞர்கள் சிலர் இலங்கைக்கு வருகை தந் துள்ளனர்.

கண்டி பொல்கொல்ல கூட்டுறவு சங்க மண்டபத்தில் எம்.ஜி. ஆரின் இரண்டாம் நூற்றாண்டு ஆரம்ப விழாஆரம்பமாகிஇடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கலந்து கொள்வதற்காக அவர்கள் இலங்கை வந்தடைந்துள்ளனர் என தெரிய வந்துள்ளது.

நடிகரும் இயக்குநருமான கே.பாக்கியராஜ், நடிகர் பாண்டியராஜ், நகைச்சுவை நடிகர் ரமேஷ் கண்ணா, தேனிசைத் தென்றல் தேவா, குணச்சித்ர நடிகர் சரவணன் உள்ளிட்டோரே நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

# சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம்: பூசாரியை வெளியேற்றியது ஆலய நிர்வாகம்

கிளிநொச்சி கோரக்கன் கட்டுப்பகுதியில் சிறுவனைக் கடத்திச் சென்று பாலியல் துன்புறுத்தலுக்குள்ளாக்கினார் எனக் கூறப்படும் பூசகர் பொதுமக்களின் கடும் எதிர்ப்பையடுத்து நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி கோரக்கன் கட்டு பகுதியில் உள்ள நாக தம்பிரான் ஆலயத்தின் திருவிழா பூசைக்காக கிளிநொச்சி நகரிற்கு அண்மையிலுள்ள ஆலயம் ஒன்றில் பூசை செய்து வந்த பூசகர் அழைக்கப்பட்டு பூசைகள் முன்னெடுக்கப்பட்டுவந்தன.

இந்த நிலையில் ஆலயத்திற்கு பூசை செய்வதற்கு வந்த பூசகர் அப்பகுதியைச் சேர்ந்த சிறுவன் ஒருவனை தன்னுடைய மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சிக்கு அழைத்துச் சென்று அங்கு அறையொன்றில் நாள் முழுவதும் பூட்டி வைத்துப் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியமையால் பாதிக்கப்பட்ட சிறுவன் கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளான்.

இந்நிலையில் பூசகரை பாதுகாக்கும் வகையில் ஆலய நிர்வாகம் செயற்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது. பொதுமக்களின் கடும் எதிர்ப்பால் பூசகர் நேற்று முன்தினம் மாலையுடன் நிர்வாகத்தால் வெளியேற்றப்பட்டுள்ளார்.

இதே வேளை பாதிக்கப்பட்ட சிறுவன் தொடர்ந்தும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஹெரோயினுடன் இருவர் கைது

ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடவத்தை - எந்தேரமுல்ல பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மோட்டார் வாகனத்தில் செல்ல முற்பட்ட நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், மற்றுமொரு சந்தேக நபரும் வத்தளை - ஹுனுப்பிட்டிய பிரதேசத்தில் வைத்துக்கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் இந்தச் சந்தேகநபர்களிடமிருந்து 3 அலைபேசிகளும் பொலிஸாரினால் மீட்க்கப்பட்டுள்ளன.

# பிலிப்பைன்ஸைத் தாக்கிய மங்குட் புயல்: 12 பேர் பலி







மணிலா, செப். 17

பிலிப்பைன்ஸில் மங்குட் என்ற புயல் நேற்று கடுமையாக தாக்கியதில் 12 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இது இந்த ஆண்டின் மிக சக்தி வாய்ந்த புயல் இது என கருதப்படுகிறது. புயல் காரணமாக பிலிப்பைன்ஸின் வடக்கு கடற்கரை பகுதியில் கடும் காற்றுடன் பலத்த மழை பெய்து வருகிறது. மணிக்கு 200 கி.மீ. வேகத்தில் காற்று வீசுவதால் வீடுகளின் கதவுகள், ஜன்னல்கள் உடைந்து நொருங்கின. மின்சாரம் தடைபட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

காற்று கடுமையாக வீசியதால் கடும் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. 'மங்குட்' புயல் 4ஆவது ரகம் என கணிக்கப்பட்டுள்ளது. இதனால் ககயான், வடக்கு இசபெல்லா, அபயாவோ மற்றும் அபாரா மாகாணங்கள் பெரும் பாதிப்பை சந்தித்துள்ளன.

இந்நிலையில், புயல் ஏற்படுத்திய பாதிப்புகளில் சிக்கி 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், பலரைக் காணவில்லை என தகவல் வெளியாகியுள்ளது.

புயல் காரணமாக பிலிப்பைன்ஸில் கடல் மற்றும் வான்வழி மார்க்க பயணத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. விமான போக்குவரத்துகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

# ஆப்கானில் ஹெலி விபத்து 5 பாதுகாப்பு படையினர் பலி



காபுல், செப். 17

ஆப்கானிஸ்தானில் பாதுகாப்பு படையினர் பயணித்த ஹெலிகொப்டர் கோளாறு காரணமாக வெடித்து சிதறியதில் 5 பாதுகாப்பு படை வீரர்கள் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் பயங்கரவாதிகளை ஒடுக்கும் முயற்சியில் அந்நாட்டு இராணுவம் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. தலிபான்களை முன்னேற விடாமல் தடுப்பதும், அவற்றின் கட்டுப்பாட்டில் இருக்கும் சில நகரங்களை மீண்டும் அரசின் வசம் ஒப்படைப்பதுமே குறிக்கோளாக கொண்டு பாதுகாப்பு படை வீரர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

சமீபத்தில் தலிபான்களை எளிதில் தாக்குவதற்கு ஏதுவாக, பாதுகாப்புப் படை வீரர்களை உரிய இடத்தில் கொண்டு சேர்க்க வான்வழி மார்க்கம் பயன்படுத்தப்படுகிறது. இதன்மூலம் விரைவில் பாதுகாப்பு படை வீரர்கள் செல்ல வேண்டிய இடத்துக்கு சென்று தாக்குதல்களை நடத்த முடிகிறது.

அவ்வாறு நேற்றுமுன்தினம் பாதுகாப்பு படை வீரர்களை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டர் ஒன்று இயந்திர கோளாறு காரணமாக வெடித்து சிதறியது. இந்த விபத்தில் அதில் பயணம் செய்த 4 வீரர்கள், ஒரு விமானி உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து ஃபாராஹ் மாகாணத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில் - தலிபான் தாக்குதலில் இந்த விபத்து ஏற்படவில்லை எனவும், தொழில்நுட்ப கோளாறு காரணமாகவே விபத்து ஏற்பட்ட து என்றும் தெரிவித்துள்ளார்.

# மெக்சிகோ சுற்றுலா தலத்தில் துப்பாக்கி சூட்டில் 4 பேர் பலி!



மெக்சிகோவில் உள்ள சுற்றுலா தலத்தில் மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 4 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளனர்.

மெக்சிகோவில் உள்ள கரிபால்டி சுற்றுலாத்தலத்தில் ஏராளமானோர் நேற்றுமுன்தினம் திரண்டிருந்தனர். அங்கு வார விடுமுறையை உற்சாகமாக கழித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, அங்கு ஐந்து பேர் கொண்ட ஒரு கும்பல் மோட்டார் சைக்கிளில் வந்தது. அவர்கள் இசைக்கலைஞர்கள் போன்று வேடமணிந்திருந்தனர்.

அவர்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த துப்பாக்கிகளால் அங்கிருந்தவர்களை நோக்கி சரமாரியாக சுட்டு விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர்.

இந்த திடீர் தாக்குதலில் ஒரு பெண் உள்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக பலியாகினர். மேலும் 9 பேர் படுகாயம் அடைந்தனர்.

தகவலறிந்து அங்கு சென்ற பொலிஸார் காயம் அடைந்தவர்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். என்ன காரணத்துக்காக துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்பது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

# 13 ஆண்டுகளாகத் தேடப்பட்டு வந்த செருப்பு கடைசியில் கிடைத்து!

நியூயோர்க், செப். 17

13 ஆண்டுகளுக்கு முன்பு தொலைந்துபோன புகழ்பெற்ற ஜூடி கார்லாண்ட் என்ற நடிகை அணிந்த மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்ட செருப்பை தற்போது எவி.பி.ஐ. கண்டுபிடித்துள்ளது.

அமெரிக்காவில் உள்ள மின்னெசோட்டா என்ற நகரில் உள்ள ஓர் அருங்காட்சியகத்தில் மாணிக்க கற்கள் பதிக்கப்பட்டு இருந்த செருப்பு காட்சி பொருளாக வைக்கப்பட்டு இருந்தது. இந்த செருப்புகள் 'தி விசார்டு ஓவ் ஓசெட்



படத்தில் ஜூடி கார்லாண்ட் என்ற நடிகை அணிந்தவை ஆகும்.

மின்னசோட்டா அருங்காட்சியகத்தில் இருந்த இந்த ஒரு ஜோடி செருப்பை, கடந்த 2005 ஆம் ஆண்டுதிருடர் திருடிச்சென்றனர். இந்த விவகாரம் மிகப்பெரிய அளவில் பார்க்கப்பட்டது. இந்த செருப்புகளை கண்டறிவது மிக முக்கியமான ஒன்று என அறிவிக்கப்பட்டு 13 ஆண்டுகளாகத் தேடப்பட்டது.

12 ஆண்டுகளாக இந்த செருப்பு குறித்து எவ்வித தகவலும் கிடைக்காத நிலையில், கடந்த ஆண்டு எவ்.பி.ஐ. வசம் இந்த வழக்கு ஒப்படைக்கப்பட்டது. உலகின் தலைசிறந்த விசாரணை குழுவாகக் கருதப்படும் எவ்.பி.ஐ. இந்த வழக்கை கடந்த ஓராண்டாக விசாரித்து வந்தது.

இந்நிலையில், சமீபத்தில் ஒருவர் அளித்தரகசிய தகவலின் அடிப்படையில் இந்த செருப்பு மீட்கப்பட்டுள்ளது என எவ்.பி.ஐ. அறிவித்துள்ளது. இருப்பினும் இதனை திருடியவர்கள் குறித்து எவ்வித தகவலும் கிடைக்கவில்லை. எனவே இந்த வழக்கு முடியவில்லை எனவும், திருடர்களை கண்டறிய வேண்டும் எனவும் எவ்.பி.ஐ தெரிவித்துள்ளது.

# அமெரிக்கா - வடகொரிய தொடர்ந்து பேச முடிவு

வொஷிங்டன், செப். 17

அணு ஆயுதங்களை முழுமையாக கைவிடுவது தொடர்பாக வடகொரியாவுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறோம் என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூரில் கடந்த ஜூன் மாதம் 12 ஆம் திகதி அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன்னும் உச்சிமாநாடு நடத்தி சந்தித்துப்பேசினர். உலகமெங்கும் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்தப்பேச்சின் போது, கொரிய தீபகற்பத்தில் அணு ஆயுதங்களை முழுமையாக கைவிட வடகொரிய தலைவர் கிம் ஜாங் உன் சம்மதம் தெரிவித்தார். இதுதொடர்பாக அமெரிக்காவுடன் அவர் ஓர் ஒப்பந்தத்திலும் கையெழுத்திட்டார். அதைத்தொடர்ந்து பெரிய அளவில் முன்னேற்றம் ஏற்படாவிட்டாலும், வடகொரியா அணுகுண்டு சோதனையோ, கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை சோதனையோ நடத்தவில்லை.

கடந்த சில தினங்களுக்கு முன் ட்ரம்பை மீண்டும் சந்தித்துபேச விருப்பம் தெரிவித்து கிம் ஜாங் உன் கடிதம் எழுதி உள்ளார்.

இந்த நிலையில் வொஷிங்டனில் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ நிருபர்களிடம் பேசினார். அப்போது அவர், சிங்கப்பூர் உச்சி மாநாட்டில் அணு ஆயுதங்களை முழுமையாக கைவிடுவதற்கு அளித்த உறுதியை எப்படிநிறைவேற்றிக்காட்டுவது என்பது தொடர்பாக வடகொரியாவுடன் தொடர்ந்து பேச்சு நடத்தி வருகிறோம் என கூறினார்.

இதற்கு இடையே வடகொரியா மீது ஏற்கனவே விதித்த பொருளாதார தடைகளை முழுமையாக நடை முறைப்படுத்துவதற்கு தடையாக உள்ள நாடுகள் பற்றி விவாதிப்பதற்கு ஐ.நா. பாதுகாப்புசபையை இன்று கூட்ட வேண்டும் என்று அமெரிக்கா வேண்டுகோள் விடுத்து உள்ளது.

# மூன்றாம் பாலினத்தவர்களுக்காக பல்கலையில் விசேட கழிவறை

லண்டன், செப். 17

பிரிட்டன் நாட்டில் உள்ள பிரிஸ்ட்டல் பல்கலைக்கழகம் மாற்றுப் பாலினத்தவர்களின் கழிப்பறை வசதிக்காக சுமார் 30 கோடி ரூபாவை செலவிட முன்வந்துள்ளது.

உலகின் பல நாடுகளில் ஆண் - பெண்களுக்கு நிகராக மூன்றாம் பாலினத்தவர்களுக்கான சம உரிமைகள் தேவை என உரிமைக் குரல் ஒலித்து வருகிறது. இந்த கோரிக்கையை சில நாடுகள் உடனடியாக செவிமடுத்து, செயலில் இறங்குகின்றன. பல நாடுகளில் செவிடன் காதில் ஊதிய சங்காக இந்த குரல் தேய்ந்து மறைந்து விடுகிறது.

இந்நிலையில், மனித உரிமைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் பிரிட்டன் நாட்டின் பிரிஸ்ட்டல் நகரில் இயங்கிவரும் பிரிஸ்ட்டல் பல்கலைக்கழக நிர்வாகம் மூன்றாம் பாலினத்தவர்கள் பயன்படுத்தத்தக்க கழிப்பறைகளை கட்டுவதற்காக 34 லட்சம் பவுண்டுகளை செலவிட முன்வந்துள்ளது.




இந்த பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள 30 கட்டடங்களில் தற்போது இருபாலருக்கு உள்ள கழிப்பறைகளைபோல் இன்னும் நான்காண்டுகளில் மூன்றாம் பாலினத்தவர்களுக்கும் கழிப்பறைகளை அமைத்து தர திட்டமிடப்பட்டுள்ளது என பிரிஸ்ட்டல் பல்கலைக்கழகத்தின் சம உரிமை, சுதந்திரம், அணுகுமுறை சார்ந்த விவகாரங்களுக்கான அதிகாரி ஸல்லி பேட்டர்சன் தெரிவித்துள்ளார்.

(க)

# அ.தி.மு.க. ஆட்சிக்கு முடிவுகட்டும் வரை ஓய்வும் இல்லை; உறக்கமும் இல்லை!

அ.தி.மு.க. ஆட்சிக்கு முடிவுகட்டும் வரை ஓய்வும் இல்லை, உறக்கமும் இல்லை என்று தி.மு.க. முப்பெரும் விழாவில் அதன் தலைவர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் நகராட்சி மைதானத்தில் உள்ள அண்ணா திடலில் நேற்று முன்தினம் மாலை தி.மு.க. சார்பில் பெரியார் பிறந்தநாள் விழா, அண்ணா பிறந்தநாள் விழா, தி.மு.க. தொடக்கநாள் விழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது.

இந்த விழாவில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் உரையாற்றி சமயம் கூறியவை வருமாறு –

ஆட்சியில் இருந்தாலும், இல்லாவிட்டாலும் எதிர்க்கட்சிகளின் கருத்துக்கும், ஏழைகளுக்கு


மு.க.ஸ்டாலின் சூளுரை

மதிப்பளிக்கும் நாகரிகத்தை கருணாநிதி கடைசிவரை கடைபிடித்தார். அப்படிப்பட்ட பாரம்பரிய அரசியல் பின்னணியில் வார்த்தெடுக்கப்பட்டவன் தான் நான்.

என்றைக்கும் நான் கருணாநிதி ஆகமுடியாது. ஆனால் அவர் போல என்னால் உழைக்க முடியும். அவர் வழியில் திராவிடர் இயக்க கோட்பாடுகளின்படி தி.மு.க. தலைவராக இருக்கும் என்னையும் கட்சியின் நிர்வாகிகள் முதல் கடைக்கோடி தொண்டனும் எப்போது வேண்டுமானாலும் அணுகலாம்; விவாதிக்கலாம். தி.மு.க. தலைவனான பின்பு நான் பங்கேற்கும் முதல் விழா. இது என் வாழ்நாளில் மறக்க முடியாத விழா.

தமிழகத்தைச் சோதனையில் இருந்து காப்பாற்ற, அடிமைகளாக செயல்படும் இந்த ஆட்சிக்கு முடிவுகட்ட நாம் உறுதி ஏற்க வேண்டும். நாம் ஓய்வு எடுக்கக் கூடாது. உறங்கவும் கூடாது. நாம் ஓய்வு எடுத்துவிட்டால், இந்த தமிழகம் என்றைக்கும் விடியவே விடியாது. எனவே ஊக்கத்தை புதுப்பித்துக்கொண்டே இருந்தால் தான் ஒரு மதசார்பற்ற ஆட்சியை தமிழகத்தில் உருவாக்க முடியும்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஜனநாயகத்துக்கு விரோதமான ஆட்சி. 'பாசிச ஆட்சி ஒழிக' என்ற மாணவியின் பாஸ்போர்ட் முடக்கப்பட்டு உள்ளது. 'ம்ம்' என்றால் சிறைவாசம், 'ஏன்' என்றால் துப்பாக்கி சூடா? தமிழக மக்கள் ஒருபோதும் ஏமாற மாட்டார்கள். பாடம் புகட்டும் நேரம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது.

மத்திய பா.ஜ.க. அரசால் பாதிக்கப்பட்ட மாநிலங்களில் தமிழகமே முதன்மையானது. காரணம் இங்கு ஆட்சியாளர்கள் சரியில்லை. ஆட்சியை காப்பாற்ற மட்டுமே ஓர் ஆட்சி நடத்துகிறார்கள். நாளொரு ஊழல், பொழுதொரு ஊழல் என்பதே தமிழக ஆட்சியாளர்கள் குரல்.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு செர்பியா ஜனாதிபதியுடன் சந்திப்பு!



தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளான செர்பியா, ரோமானியா மற்றும் மால்டா நாடுகளுக்கு ஒரு வார காலமாக உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டுள்ள துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு செர்பியா ஜனாதிபதி யுடன் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

தனது பயணத்தின் முதல் நாடாக செர்பியா சென்றடைந்த அவருக்கு தலைநகர் பெல்கிரேடில் உள்ள செர்பியா மாளிகையில் சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. இதைத்தொடர்ந்து செர்பியா மற்றும் இந்திய உயர்அதிகாரிகள் மட்டத்திலான பேச்சு நடைபெற்றது.

இதில், உணவு உற்பத்தி, விவசாயம், மருந்துகள், பாதுகாப்புத்துறை மற்றும் தொழில்நுட்பம் தொடர்பாக இரு நாட்டு அதிகாரிகளும் ஆலோசனை நடத்தினர். பின்னர், வெங்கையா நாயுடு மற்றும் செர்பியா ஜனாதிபதி அலக்சாண்டர் வூசிக் இடையே தனியாகச் சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பின்போது இரு நாடுகளின் உறவுகள், பொருளாதாரம் மற்றும் வர்த்தகத்தில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது தொடர்பாக இரண்டு தலைவர்களும் பேச்சு நடத்தினர் என வெளியுறவுத்துறை செய்திதொடர்பாளர் ராவேஷ் குமார் டுவிட்டரில் தெரிவித்தார்.

## மு.க.அழகிரியை தி.மு.க.வில் சேர்க்க வலியுறுத்தி கையெழுத்து இயக்கம்!



தி.மு.க.வில் சேர்க்க வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் நடத்தப்போகிறோம் என மு.க.அழகிரியின் ஆதரவாளர் மன்னன் தெரிவித்தார்.

பேரறிஞர் அண்ணாவின் 110 ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை நெல்பேட்டையில் உள்ள சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. முன்னாள் மத்திய அமைச்சர் மு.க.அழகிரி, தனது ஆதரவாளர்களுடன் வந்து அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

முன்னாள் எம்.எல்.ஏ. கவுஸ்பாட்சா, முன்னாள் துணை மேயர் மன்னன், முன்னாள் மண்டல தலைவர் சின்னான், நிர்வாகிகள் உதயகுமார், எம்.எல்ராஜ், வாவா புகர்தீன், பக்ருதீன் உள்பட பலர் இதில் பங்கேற்றனர்.

அப்போது மன்னன் நிருபர்களிடம் கூறுகையில், மு.க.அழகிரியையும், எங்களையும் தி.மு.க.வில் சேர்க்க வேண்டும். இதற்காக தொண்டர்களை திரட்டி, இன்று முதல் கிளை கழகம் முதல் ஒன்றியம், பேரூராட்சி பகுதிகளில் கையெழுத்து இயக்கம் நடத்த உள்ளோம். அதனை தி.மு.க. தலைமைக்கு மின்னஞ்சல் மற்றும் பேக்ஸ் மூலம் அனுப்ப உள்ளோம். அழகிரியின் வீட்டில் இருந்து கையெழுத்து இயக்கம் தொடங்குகிறது.– என்று தெரிவித்துள்ளார் .

ராஜீவ் காந்தி கொலை வழக்கு;

## ஏழு கைதிகள் விடுதலை விடயம்; இன்னும் ஆளுநர் கைகளில்தான்!

பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் விடுதலை விவகாரம் தொடர்பாக தமிழக ஆளுநர் அலுவலகத்தில் இருந்து மத்திய உள்துறைக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது என வெளியான தகவலை ஆளுநர் மாளிகை மறுத்துள்ளது.

தமிழக அமைச்சரவை கூட்டத்தில் ராஜீவ் கொலை கைதிகள் 7 பேரையும் விடுதலை செய்ய ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

பின்னர் அந்தப் பரிந்துரை ஆளுநர் மாளிகைக்கு அனுப்பி வைக்கப்பட்டது என தகவல்கள் வெளியாகின. இதையடுத்து 7 பேர் விடுதலை விவகாரத்தில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் என்ன முடிவு எடுப்பார் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

இதற்கிடையே நேற்று முன்தினம் இந்த விவகாரத்தில் பரபரப்பான புதிய தகவல் ஒன்று வெளியானது. 7 பேரை விடுதலை செய்ய கோரும் அமைச்சரவை பரிந்துரையை மத்திய உள்துறைக்கு ஆளுநர் அனுப்பி வைத்துள்ளார் என தகவல் வெளியானது.

மத்திய உள்துறை அதுபற்றி ஆலோசித்து வருவதாகவும் அந்த தகவலில் கூறப்பட்டு இருந்தது. எனவே 7 பேர் விடுதலையில் புதிய சிக்கல்கள் எழுந்



துள்ளன எனவும் பரபரப்பாக பேசப்பட்டது.

இந்த பரபரப்பு தகவலை நேற்று ஆளுநர் மாளிகை மறுத்தது. இது தொடர்பாக ஆளுநர் மாளிகை இணை இயக்குனர் ஒரு செய்தி குறிப்பு வெளியிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு–

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியை கொலை செய்த கைதிகளை விடுதலை செய்யக்கோரும் தமிழக அரசின் பரிந்துரையை ஆளுநர் மத்திய உள்துறைக்கு அனுப்பி வைத்திருக்கிறார் என சில பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ளது. இதை அடிப்படையாக கொண்டு சில தொலைக்காட்சிகளில் விவாதங்களும் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த விவகாரத்தில் மத்திய உள்துறைக்கு ஆளுநர் மாளிகை சார்பில் எந்த ஒரு குறிப்பும் அனுப்பவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த வழக்கு மிகவும் முரண்பாடான ஒன்று. இதில் சட்ட ஆய்வு, நிர்வாக ஆய்வு, அரசியல் சாசன ஆய்வு ஆகியவை அடங்கியுள்ளன.

இது தொடர்பான ஆவணங்கள், அது தொடர்பான நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் அரசின் பரிந்துரை அனைத்தும் நேற்று முன்தினம் தான் ஆளுநர் மாளிகைக்கு வந்துள்ளன. இந்த பரிந்துரை மீதான ஆய்வை மேற்கொள்ள அனைத்து நடவடிக்கைகளும் உடனடியாக எடுக்கப்படும்.

இந்த விவகாரத்தில் சட்ட ஆலோசனைகள் உள்பட அனைத்து ஆலோசனைகளும் தேவைக்கேற்ப பெறப்படும். அதன் அடிப்படையில் சட்டப்படி பாரபட்சமின்றி முடிவு எடுக்கப்படும்.– என்று அதில் கூறப்பட்டுள்ளது.

இதன் மூலம் தமிழக அரசின் பரிந்துரை தற்போது ஆளுநர் பன்வாரிலாலின் ஆலோசனையில் இருப்பது உறுதியாகி உள்ளது. அவர் மத்திய உள்துறைக்கு அதை அனுப்புவாரா? அல்லது சட்ட நிபுணர்களுடன் கலந்து பேசித் தாமாகவே முடிவை அறிவிப்பாரா?.– என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

## மோடி தலைமையிலான அரசு தூக்கி எறியப்பட வேண்டும்!

ம.தி.மு.க. மாநில மாநாட்டில் வைகோ தெரிவிப்பு

இந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்க மோடி தலைமையிலான அரசு தூக்கி எறியப்பட வேண்டும் என்று ம.தி.மு.க. மாநில மாநாட்டில் வைகோ தெரிவித்துள்ளார்.

ம.தி.மு.க. மாநில மாநாடு ஈரோட்டில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ பேசினார். அப்போது அவர் தெரிவித்ததை வருமாறு –

தமிழக அரசு தூக்கி எறியப்பட வேண்டிய அரசு. மணல், குட்கா, ஒப்பந்த பணிகள் என அனைத்திலும் ஊழல். மத்திய அரசுக்கு குற்றேவல் செய்யும் அரசாக இது இருக்கிறது. இந்தநிலையில் சமூகநீதி, இடஒதுக்கீடு, மதச்சார்பின்மை, ஒருமைப்பாடு ஆகியவற்றை பாதுகாக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். மத்தியில் இருக்கும் நரேந்திரமோடியின் கூட்டம் தூக்கி எறியப்பட வேண்டும்.

தமிழ் ஈழம் மலர்ந்து ஐ.நா.சபையில் தமிழர் நாட்டுக்கு என்று பிரதிநிதி வேண்டும். என் இதயத்தில் பதிந்த பிரபாகரன் என்ற ஓவியத்தை எந்த சக்தியாலும் அழிக்க முடியாது. இன்று டெல்லியில் உட்கார்ந்து கொண்டு 7 நாட்டுப் படைகளின் உதவியுடன் விடுதலை புலிகளை அழித்தோம் என்று கொக்கரிக்கிறான் ராஜபக்ஷ. அந்த 7 நாட்டுப் படைகள் உதவி இல்லாமல் இருந்தால், சிங்கள படையை வைத்துக்கொண்டு விடுதலை புலிகளை ராஜபக்ஷவால் வென்றிருக்க முடியாது. ஹிட்லரை விட கொடுமைகள் செய்தவன் ராஜபக்ஷ.

என் வாழ்க்கையில் நான் செய்த மிகப்பெரிய தவறு நரேந்திர மோடியுடன் கூட்டணி வைத்தது. ஆனாலும், அவர் பதவியேற்பு விழாவில் ராஜபக்ஷவை அழைத்தபோது, அவர் வரக்கூடாது, மீறி வந்தால் கருப்புக்கொடி காட்டுவோம் என்று உடனடியாக வெளியேறினோம். பதவிகள் கிடைக்குமென்று அங்கே இருக்கவில்லை. பிரபாகரன் தனி மனித ஒழுக்கம் நிறைந்தவர். அவருடைய படையில் உள்ள வீரர்களும் ஒழுக்கம் மிக்கவர்கள். அவர்களால் எந்தவொரு சிங்கள பெண்ணுக்காவது பாலியல் தொல்லை இருந்தது என்று யாரும் சொல்ல முடியாது.

எனவேதான் எங்கள் ரத்தத்திலும், தொண்டர்களின் ரத்த அணுக்களிலும் ஈழ விடுதலை என்ற உணர்வு கலந்து உள்ளது. மதவாத ஆட்சி அகல வேண்டும். மத்தியில் கூட்டணி தத்துவத்துக்கு வடிவம் கொடுக்கும் கூட்டணி ஆட்சி அமையும்.

தமிழகத்தில் இந்த அரசு அகற்றப்பட வேண்டும். தி.மு.க. தலைமையில் ஆட்சி அமைய வேண்டும் என்கிற உறுதியை எடுத்துக்கொண்டு கூட்டணியை அறிவித்தோம். என் மீது விமர்சனங்களை யாரும் கண்டுகொள்ள வேண்டாம். எனக்காக பலர் உயிர்விட்டது போதும். நான் நாணயமாக இருக்கிறேன். நான் நேர்மையாக இருக்கிறேன்.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்

# அரசின் தலைவர்களுக்கு எதிராகவும் மக்கள் விரைவில் கூச்சலிடுவார்கள்!

## எச்சரிக்கின்றார் சுசில் பிரேமஜயந்த



கொழும்பு,செப்.17

மேடையில் இருக்கும் அமைச்சர்களுக்கு எதிராகப் பொது மக்கள் போடும் கூச்சல் சப்தம், நாட்டுத் தலைவர்களுக்கும் வந்து விடாமல் பார்த்துக் கொள்ளுமாறு மஹிந்த குழு நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மக்களின் கேள்விக்குப் பதிலளிக்க முடியாத அமைச்சர்கள் தான் இந்த அரசாங்கத்தில் உள்ளனர். ஊடகவியலாளர் சந்திப்புக்களில் இந்த அமைச்சர்கள் திண்டாடுகின்றார்கள்.

காலியில் வைத்து அமைச்சர் ஒருவருக்கு எதிராகப் பொது மக்கள் கூச்சல் போட்டனர். நேற்றும் ஒரு முக்கிய அமைச்சர் ஒருவருக்கு ஹோமாகம பகுதியில் வைத்து மக்கள் கூச்சலிட்டமையைப் பார்த்தோம்.

இந்த அமைச்சர்களுக்கு எதிராக வைக்கும் கூச்சல் தொடர்பில் அரச தலைவர்கள் முன்னெச்சரிக்கையாக இருக்கவில்லையாயின், அரச தலைவர்களுக்கும் அது நாளை வரும். - எனவும் அவர் மேலும் கூறினார். (உ)

# ஜே.வி.பியின் 20ஆவது திருத்தப் பிரேரணை நாட்டுக்குப் பயனற்றது என்கிறார் மஹிந்தர்

கொழும்பு,செப்.17

மக்கள் விடுதலை முன்னணியினால் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள 20 ஆவது அரசமைப்புத் திருத்தப் பிரேரணை நாட்டிற்குப் பயனற்ற ஒன்றாகும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் ஜய ஸ்ரீ மகா போதியில் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துதெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

20 ஆவது திருத்தச் சட்ட மூலம் தோல்வியான ஒரு முயற்சியாகும். அதற்கு சர்வஜன வாக்கெடுப்பொன்று நடாத்தப் படல்வேண்டும். இவர்கள் குறுக்கு வழியில் சட்டத்தைக் கொண்டு வர முயற்சிக்கின்றனர். உயர் நீதிமன்றம் அதற்கு இடமளிக்க மாட்டாது.

நாட்டில் தேர்தல் ஒன்றை நடாத்துமாறே பொது மக்களும் அன்று வீதிக்கு வந்து அரசாங்கத்தைக் கேட்டனர். இருப்பினும், அதற்கு அரசாங்கம் இதுவரையில் எந்த விதமான பதிலையும் அளிக்க வில்லை. - என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

# அரசியல் பரபரப்புக்கு மத்தியில் நாளை கூடுகிறது நாடாளுமன்று

செப்டம்பர் மாதத்துக்குரிய இரண்டாம் வார நாடாளுமன்றக் கூட்டத்தொடர் நாளை செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதிவரை நடைபெறும் சபை அமர்வுகளில் முக்கிய சில சட்டமூலங்கள் நிறைவேற்றப்படும் என்பதுடன், சபை ஒத்திவைப்புவேளை பிரேரணைகளும் முன்வைக்கப்படவுள்ளன.

நாடாளுமன்ற நிகழ்ச்சிநிரல் குறித்து ஆராய்வதற்காக இன்று அல்லது நாளை காலை கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம் பெறும். இதன்போதே விவாதத்துக்கு எடுக்கப்படவேண்டிய விடயங்கள் சம்பந்தமாக இறுதி முடிவெடுக்கப்படும்.

அதேவேளை, ஆளுங்கட்சி மற்றும் எதிரணி ஆகியவற்றின் நாடாளுமன்றக்குழுக்கூட்டங்களும் இவ்விரு தினங்களில் கூட்டப்படவுள்ளன.

ஐ.நா.பொதுச்சபைக் கூட்டத்தொடரில் ஜனாதிபதியால் முன்வைக்கப்படவுள்ள புதிய முன்மொழிவு, ஊடகப்பிரதானிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதியால் முன்வைக்கப் பட்ட கருத்துகள், படையினருக்கு எதிரான குற்றச்சாட்டு உட்பட மேலும் சில விடயங்களால் கொழும்பு அரசியல் பெரும் பரபரப்பாகவே இருக்கின்றது. இந்நிலையிலேயே சபையும் செவ்வாயன்று கூடுகின்றது.

# புறக்கோட்டையில் கைக்குண்டுகள் மீட்கப்பட்டன

கொழும்பு, புறக்கோட்டை, பஸ்டியன் மாவத்தையில் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப் பட்ட 2 கைக்குண்டுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலையேற்பட்டது.

மொனராகலைப் பகுதியைச் சேர்ந்த 39 வயதான ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்றும், அவர் நேற்றே நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டுகள் மீட்கப்பட்டமையையடுத்து அப்பகுதியில் பொலிஸார் தேடுதல் நடவடிக்கையில் இறங்கினர். கைதானநபரிடம் பல கோணங்களில் விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

### ரயிலுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழில் இருந்து மாத்தறை நோக்கிச் சென்ற ரயிலுடனேயே நேற்றுக் காலை 10.20 மணியளவில் இந்தக் கார் மோதுண்டுள்ளது.

'ஏ9' வீதியில் இருந்து பன்றிக்கெய்தகுளம் பகுதியில் உள்ள உறவினர் வீடு ஒன்றுக்குச் செல்வதற்காக ஆலய வீதி ஊடாக பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் காரில் வந்தோர் கடந்த போதே இந்த அனர்த்தம் நேர்ந்திருக்கின்றது.

காரில் பயணித்த எண்மரில் நால்வர் உயிரிழந்தனர்; இருவர் படுகாயமடைந்தனர். சாரதி உட்பட இருவர் தெய்வாதீனமாகக் காயம் ஏதுமின்றித் தப்பினர்.

இந்த விபத்துத் தொடர்பாக விசாரணை நடத்தி வரும் ஓமந்தைப் பொலிஸார் கார்ச் சாரதியைக் கைது செய்துள்ளனர்.

சுவீடன்நாட்டிலிருந்துதாயகம் திரும்பியவர்களே இந்தக் கோர விபத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

விபத்தில் சுவீடன் நாட்டு பிரஜையான 30 வயதான கமலநாதன் சிவரஞ்சனி உயிரிழந்துள்ளார்.

நெடுந்தீவு மேற்கை சேர்ந்த 32 வயதான காண்டீபன் யமுனாரஞ்சனி, 56 வயதான இசைஞானவதி யோகரத்தினம், 13 வயதான காண்டீபன் டிசாலினி ஆகியோரும் விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்து காரணமாக சுவீடனை சேர்ந்த 34 வயதான ஜேம்ஸ் கமலநாதன் மற்றும் ஆறு வயதான கமலநாதன் ஜெசிகா ஆகியோர் படுகாயம் அடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக வெளிநாட்டிலிருந்து தாயகம் திரும்புவோர் யாழ்ப்பாணம் செல்லும் போது விபத்துக்குள்ளாகும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து தாயகம் திரும்பிய பெண்ணொருவர் யாழ்ப்பாணம் செல்லும் போது ஏ-9 வீதியில் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

### நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரப்பினரே அழைப்பு விடுத்திருந்தனர் எனவும் தற்போதைய அரசாங்கம் கவிழப் போகின்றது என்பதனை அறிந்தே அவர்கள் மஹிந்த ராஜபக்ஷவை அங்கு அழைத்திருந்த னர் எனவும் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### உண்ணாவிரதகைதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரை நேற்று மாலை கொழும்பு சிறைச்சாலைவைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர் என அறிய வந்தது.

இந்தக் கைதி ஒரு நீரிழிவு நோயாளிஎன்றும், அத்தகையவர் உண்ணாவிரதம் இருக்கும்போது அவருக்கான மருந்துகளைத் தான் பரிந்துரை செய்ய முடியாது என்றும் அநுராதபுரம் சிறை வைத்தியர்கள் தெரிவித்தமையை அடுத்தே அவரைக் கொழும்பு சிறைச்சாலைவைத்தியசாலைக்கு மாற்ற முடிவு எடுக்கப்பட்டது எனச் சிறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தில்லைராஜ் சிவசுப்பிரமணியம்என்றகைதியேகொழும்புக்கு மாறெப்படுகின்றார் எனத் தெரிய வந்தது.

### பஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியுமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

தேசியப் போக்குவரத்து ஆணைக்குழு 4 வீதத்தால் அதிகரிக்க முடியுமென தெரிவித்துள்ளது எனக் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் கட்டண அதிகரிப்பு தொடர்பாக இதுவரை எந்த வித இறுதித் தீர்மானமும் எடுக் கப்படவில்லை.

### புதிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னைத் திட்டம் ஆங்கிலத்தில் தயாரித்து வழங்கப்பட்டுள்ள நிலையில், ஏற்கனவே அதை அங்கீகரித்துள்ள வழிகாட்டல் குழு, அந்த யோசனைத் திட்டத்தின் சிங்கள, தமிழ் மொழி பெயர்ப்புகளைப்பரிசீலிப்பதற்காக வெள்ளியன்று கூடுகின்றது.

அன்று பெரும்பாலும் இந்த யோசனைத்திட்டத்தை அப்படியே அரசமைப்பு நகல் வடிவமாக ஏற்றுக் கொள்வதா என்பது குறித்தும் -

அப்படி ஏற்றுக் கொண்டால், அந்த நகலை அரசமைப்புப் பேரவையாக நாடாளுமன்றைக் கூட்டி அதனிடம் சமர்ப்பிப்பதற்கான திகதி குறித்தும் -

தீர்மானிக்கப்படும் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வழிகாட்டல் குழுவின் கூட்டத்தை வரும் வியாழக்கிழமை கூட்டுவதாகவே முதலில் தீர்மானிக்கட்டிருந்தது. அது இப்போது வெள்ளிக்கிழமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

### உண்ணாவிரதமிரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களின் பிரச்சினை குறித்து இன்று அல்லது நாளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாக உரையாடி ஒரு முடிவைத் தாம் பெற்றுத் தர முயல்வார் என்று அந்த ஒன்பது சிறைக் கைதிகளிடம் உறுதி கூறினார் சுமந்திரன் எம்.பி.

ஒன்பது வருடங்களுக்கு மேல் தொடர்ந்து தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தங்களை குறுகிய கால புனர்வாழ்வு வழங்கியாவது விடுதலை செய்யுங்கள் என்று வலியுறுத்தியே மீண்டும் ஓர் உண்ணாவிரதப் போராட்டத்தைக் கடந்த வெள்ளியன்று அவர்கள் ஆரம்பித்தார்கள் என்பது தெரிந்ததே.

இந்த ஒன்பது பேரும் முக்கியமான வழக்குகளில் சம்பந்தப் பட்டவர்கள் என்று தெரிவித்தே தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். ஆனால் அவர்களின் குற்றஒப்புதல் வாக்குமூலம் என்றபெயரில் முன்வைக்கப்பட்ட ஆவணம் தவிர, அவர்களுக்கு எதிராகக் காத்திரமான ஆதாரங்கள் எவையும் முன்வைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சட்டத்தரணிகள் சுமந்திரனும், சயந்தனும் நேற்றுப் பகல் சுமார் ஒரு மணி நேரம் அனுராதபுரம் சிறைச்சாலையில் அந்தக் கைதிகளைச் சந்தித்து அவர்களின் ஆதங்கங்களைக் கேட்டறிந்தனர்.

இன்று அல்லது நாளை எப்படியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து அவர்களின் விடயம் குறித்து அவருடன் கலந்துரையாடி ஒரு முடிவை எடுத்துத் தாம் அறிவிப்பார் என அந்தக் கைதிகளிடம் சுமந்திரன் உறுதியளித்தார் என அறிய வந்தது.

ஜெகன் இராசதுரை, சுலக்ஷன் மதியரசன், திருவருள் இராசதுரை, தர்ஷன் கணேசன், ஜெயச்சந்திரன் சூரிய காந்தி, நிமலன் தங்கவேலு, தில்லைராஜ் சிவசுப்பிரமணியம், சிவப்பிரகாசம் சிவசீலன், தபோரூபன் இராசவல்லவன் ஆகிய ஒன்பது கைதிகளே உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர். (உ)

### பாரிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேன்மையான அம்சங் களைக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தச் சட்டத்தின் படி -

★ இதன்கீழ் கைதுசெய்யப்படுவோர் 48 மணி நேரத்துக்குள் நீதிவான் முன்னால் நிறுத்தப்பட வேண்டும்.

★ தடுப்புக் காலம் உத்தரவு ஆகக்கூடியது எட்டுவாரங்களுக்கு மட்டுமே வழங்கலாம்.

★ இரண்டு வாரத்தின் பின்னர் தடுப்புக் காவலை நிராகரிக்க நீதிவானுக்கு அதிகாரம் உண்டு.

★ குற்றவியல் விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாமல் தாமதிக்கப்பட்டு இழுபடுமானால் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் பிணை பெறும் உரிமை சந்தேக நபர் தரப்புக்கு உண்டு.

★ நீதிவான் சந்தேக நபரை தனியாகச் சந்தித்து அவரின் நலனைக் கவனிப்பதோடு, சந்தேக நபர் ஏதேனும் முறையீடு செய்வாராயின் அவற்றைப் பதிவு செய்யவும் வேண்டும்.

★ நீதிவான் தான் விரும்பும் சமயத்தில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்குள் முன்னறிவித்தல் இன்றி நுழைந்து, அந்த இடத்தைப் பரிசீலித்து, அது தொடர்பான பதிவுகளை ஆராய்ந்து, சந்தேக நபர்களுடன் உரையாடி தேவையான நடவடிக்கை எடுக்க முடியும்.

- என்று தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதிகளைக் கேட்டுக் கேள்வியின்றி தடுப்புக் காவல் உத்தரவை நீடிப்பதன் மூலம் உரிய விசாரணையின்றியே 18 மாத காலம் வரையும் தடுத்து வைத்திருக்கவும் -

வழக்கு விசாரணையின்றி விளக்கமறியலின் கீழ் எத்தனை வருடங்களும் தடுத்து வைத்திருக்கவும் -

முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)




# தென்னாபிரிக்க அணியில் மீண்டும் முக்கிய வீரர்கள்

டேல் ஸ்ரெய்ன், இம்ரான் தஹிர், கிறிஸ்டியன் ஜோன்கர் ஆகியோர் மீண்டும் தென்னாபிரிக்க அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் மற்றும் ஒக்ரோபர் மாதங்களில் நடைபெறவுள்ள சிம்பாப்வே அணிக்கெதிரான தொடருக்கான தென்னாபிரிக்க அணியில் அவர்களது பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சிம்பாப்வே அணிக்கெதிரான தென்னாபிரிக்க அணி கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டது. இதில் ஒருநாள் போட்டி மற்றும் ரி - 20 போட்டிகளில் அணியை டுபிளசிஸ் வழிநடத்துகின்றார்.

ஒருநாள் போட்டிக்கான அணி விபரம்: டூபிளெசிஸ் (தலைவர்), ஹஷிம் அம்லா, ஜே.பி. டுமினி, ரீஸா ஹெண்டிரக்ஸ், இம்ரான் தாஹிர், கிறிஸ்டியன் ஜான்கர், ஹெய்ன்ரிக் க்ளாசென், கேசவ் மகாராஜ், ஐடன் மார்க் ராம், வியான் முல்டர், லுங்குனிநஜிடி, ஆண்டில் பெஹல்குவே, கிக்சோ ரபாடா, தாபராஸ் ம்ஸி, டேல் ஸ்ரெய்ன், கயா ஸோண்டோ.

ரி - 20 போட்டிக்கான விவரம்: ஃபாஃப் டூபிளெசிஸ் (சி), ஜிஹாஹ்ஹ் குளோடே, ஜூனியர் டலா, குவின்டன் டி காக், ஜே.பி. டுமினி, ராபி ஃப்ரைலிங்க், இம்ரான் தாஹிர், கிறிஸ்டியன் ஜான்கர், ஹெய்ன்ரிக்க்ளாசென், டேவிட் மில்லர், லுங்குனிநஜிடி, டேன் பேட்டர்சன், ஆண்டில் பெஹல்குவே, தாபராஸ் ம்ஸி, ரஸ்ஸி வான் டெர் டஸன் ஆகியோர் விளையாடவுள்ளனர்.

# டோனிக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த பாகிஸ்தான் வீரர்



ஆசியக் கிண்ணப் போட்டிக்காக பயிற்சியில் ஈடுபட்டிருந்த இந்திய வீரர் டோனியை, பாகிஸ்தான் அணி வீரர் சோயிப் மாலிக் திடீரென சந்தித்து வாழ்த்து கூறினார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் நேற்று முன்தினம் 14ஆவது ஆசியக்கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடர் தொடங்கியது. இதில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்கதேசம், ஹாங்காங் ஆகிய அணிகள் பங்கேற்கின்றன.

இந்த தொடருக்காக 6 அணிகளின் வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நிலையில், நேற்றுமுன்தினம் இந்திய கிரிக்கெட் அணி வீரர்களும், பாகிஸ்தான் அணி வீரர்களும் பயிற்சியில் ஈடுபட்டிருந் தனர்.

அப்போது திடீரென இந்திய வீரர்கள் பயிற்சி செய்துகொண்டிருந்த இடத்திற்கு, பாகிஸ்தானின் சகலதுறை வீரர் சோயிப் மாலிக் வந்தார்.

அவர் டோனியை சந்தித்து தனது வாழ்த்தினை தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பின்னர் மாலிக் தனது அணியுடன் பயிற்சிக்குத் திரும்பினார்.

# றக்பியிலும் சாதிக்கும் இலங்கை மகளிர் அணி

ஆசிய றக்பி விளையாட்டு போட்டியில் இலங்கை மகளிர் அணி வெற்றியீட்டியது. ஆசிய றக்பி மகளிர் அணிக்கு ஏழு பேர் கொண்ட போட்டியில் இலங்கை மகளிர் அணி தாய்லாந்து அணியை தனது சிறப்பான ஆட்டத் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்றது.

இதன் மூலம் இலங்கை மகளிர் றக்பி அணி 22:10 என்ற அடிப்படையில் தாய்லாந்து அணியை தோற்கடித்து வெற்றியை தனதாக்கி 3 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

# முரளி விஜய் மீண்டும் கலக்கல்

அண்மையில் இங்கிலாந்துடனான டெஸ்ட் தொடரின் போது இந்திய அணியிலிருந்து நீக்கப்பட்ட ஆரம்ப துடுப்பாட்ட வீரர் முரளி விஜய் மீண்டும் ஓட் டங்களை குவிக்கத் தொடங்கியுள்ளார்.

இங்கிலாந்தின் முதற்தரக் கழகமான எசெக்ஸ்ஸிற்காக தனது அறி முகத்தை மேற்கொண்டிருந்த முரளி விஜய் 181 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள் அடங்கலாக 100 ஓட்டங்களைக் குவித்தார்.

ட்ரெண்ட் பிரிட்ஜில் நடைபெற்ற நோர்ட்டிங்ஹாமசயருக்கு எதிரான இந்தப் போட்டியில் எசெக்ஸ் அணி வெற்றி பெற்றதன் மூலம் நடப்புப் பருவாலத்தில் 8ஆவது வெற்றியைத் தனதாக்கியுள்ளது.




இதன்மூலம் முரளி விஜய் மீண்டும் இந்திய அணிக்குத் திரும்பும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

# செல்வாக்கை பயன்படுத்தி மகனை அணியில் சேர்த்தாரா இன்சமாம்?

பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் தற்போதைய கிரிக்கெட் அணி தேர்வாளருமான இன்சமாம் உல் ஹக் மீது குற்றச்சாட்டு வைக்கப்பட் டுள்ளது.

அவர் தன் பதவியின் செல்வாக்கை பயன்படுத்தி மகனுக்குக் கனிஸ்ட அணியில் இடம் பெற்றுக் கொடுத்துள்ளார் என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாட்டைப் பாகிஸ்தான் முன்னாள் சுழல் பந்துவீச்சாளர் அப்துல் காதிர் கூறியுள்ளார். இது பாகிஸ்தான் கிரிக்கெட்டில் பெரும் சர்ச்சையை உண்டாக்கியுள்ளது.

இன்சமாமின் மகன் சமீபத்தில் 19 வயதுக்கு உட்பட்டோர் அணியில் சேர்க்கப்பட்டார். இன்சமாமின் மகன் முதலில் அணியில் சேர்க்கப்படவில்லை எனவும், அதன் பின் இன்சமாம், கனிஸ்ட அணி தேர்வாளர் பாசித் அலிக்கு அழுத்தம் கொடுத்து தன் மகனை அணியில் இணைத்தார் என குற்றம் சாட்டியுள்ளார் அப்துல் காதிர்.

எனினும் இதைக் கடுமையாக மறுத்துள்ளார் இன்சமாம், இதை நிரூபித்தால் தான் பதவி விலகத் தயாராக இருப்பதாகவும், மேலும், இந்த விடயத்தை தாம் அவ்வளவு எளிதில் விட்ப்போவதில்லை எனவும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவரைச் சந்தித்து பேசவுள்ளதாகவும் கூறியுள்ளார்.



# பெண் வேடத்தில் கம்பீர்



இந்திய அணியின் ஆரம்ப அதிரடித் துடுப்பாட்ட வீரர் கவுதம் கம்பீர் தன்னைப் பெண்ணாக அலங்கரித்துக்கொண்டு திருநங்கைகளுக்கான நிகழ்ச்சியில் கலந்துகொண்ட புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களுக்கு எதிராகக் குரல் கொடுப்பது, சமூகப் பிரச்சினைகளுக்காக டுவிட்டரில் கருத்து தெரிவிப்பது எனத் தனது ஜனநாயகக் கடமைகளையும் தவறாது கம்பீர் செய்து வருகிறார்.

திருநங்கைகளை மூன்றாம் பாலினமாக ஏற்று உச்ச நீதி மன்றம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்த நிலையில், தன்பாலின உறவு தவறில்லை என கடந்த வாரம் தீர்ப்பளித்தது.

இதையும் கம்பீர் வரவேற்றிருந்தார். ரக்சா பந்தன் பண்டிகையின் போது திருநங்கைகளிடம் ராக்கி கயிறு கட்டி தனது சகோதரத்துவத்தை கம்பீர் வெளிப்படுத்தி அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

இந்நிலையில் டில்லியில் திருநங்கைகள் மாத்திரம் பங்கேற்கும் 'ஹிஜாரா ஹப்பா' எனும் விளையாட்டுப் போட்டி, கலைநிகழ்ச்சிகள் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. கடந்த 7 ஆண்டுகளாக இந்த நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது.

இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைப்பதற்காக கவுதம் கம்பீர் சிறப்பு அழைப்பாளராக அழைக்கப்பட்டிருந்தார். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட கம்பீர் செய்த செயல்தான் தற்போது பரபரப்பாகி வருகிறது.

திருநங்கைகளையும் நெகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. நிகழ்ச்சியில் கலந்துக்கொண்ட கம்பீர் திருநங்கைகளுடன் இணைந்து தன்னையும் பெண்ணாக அலங்காரம் செய்து கொண்டார்.

நெற்றியில் திலகமிட்டு, கையில் வளையல் அணிந்து, உதட்டில் சாயமிட்டு, துப்பட்டா அணிந்து பெண்ணாக மாறி விளையாட்டுப் போட்டிகளை கம்பீர் தொடங்கி வைத்தார்.









முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமரர் அ.அமிர்தலிங்கத்தின் 91 ஆவது பிறந்த தின நினைவுப்பேருரை யாழ். பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்க்ராஜா, சிறப்பு விருந்தினராக யாழ் மாவட்டநாடாளு மன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன், கௌரவ விருந்தினராக வடக்கு, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் அ. வரதராஜா பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அந்த நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.













ESOFT Metro Campus யாழ் வளாகத்தில் பட்டப்படிப்புகள் பிரிவு கடந்த சனியன்று ஆரம்பித்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள். இலங்கப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானியப் பல்கலைக்கழகங்களின் சர்வதேசப் பட்டப்படிப்புகளை யாழ். மாணவர்களுக்கு வழங்கும் வகையில் இந்த வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. ESOFT நிறைவேற்றுப் பணிப்பாளர் தயானந்த ராஜபக்ஷ இதனை ஆரம்பித்து வைத்தார்.

# மீண்டும் அரசியலுக்குள் களமிறங்குகிறார் திஸ்ஸ

"வெகுவிரைவிலேயே செயற்பாட்டு அரசியலில் களமிறங்குவேன். தனிக்கட்சிக்குரிய நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன."

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளரும் ஜனாதிபதித் தேர்தலின்போது மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவை வழங்கியவருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் முதல்வர் வேட்பாளராக திஸ்ஸ அத்தநாயக்க களமிறங்கவுள்ளார் என வெளியாகியுள்ள தகவல் குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் அரசியல் நிலைவரத்தை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். பிரதான கட்சியொன்றின் பொதுச் செயலாளராக இருந்து பல தேர்தல்களைச் சந்தித்தவன் நான். எனவே, நேரம் வரும்போது மீண்டும் செயற்பாட்டு அரசியலில் இறங்குவேன். அதற்கான நேரம் நெருங்கிவிட்டதாகவே உணர்கின்றேன்.

மாகாண சபைத் தேர்தல் என் இலக்கு அல்ல. நாட்டின் நலன் கருதியே இனி அரசியல் பயணம் தொடரும். அரசியல் சூழ்நிலைக்கேற்ப முடிவுகள் மாறக்கூடும். – என்றார்.

எனினும், திஸ்ஸ அத்தநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியில் இணையும் பட்சத்தில் அல்லது மஹிந்த அணியுடன் பயணிக்கும் பட்சத்தில் மத்திய மாகாண முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கக்கூடும் எனத் தெரியவருகின்றது.

# வேட்டைக்குச் சென்ற 2 இளைஞர் குகைக்குள் சடலங்களாக மீட்பு

ராகலை சென்லெனாட் பகுதியில் கற்குகையொன்றுக்குள்ளிருந்து இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.



இவர்கள் நேற்று முன்தினம் அந்தப் பகுதிக்கு வேட்டைக்காக சென்றவர்கள் என நம்பப்படுகின்றது. இவர்களுடன்சென்றநாயொன்றும் உயிரிழந்திருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

29 மற்றும் 31 வயதுடைய இருவரே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2018 இல் அச்சிட்டப்பட்டு வெளியிடப்பெற்றது.